# ஸ்ரீ குமரகுருபரர்



தை 1
(14-1-83)

தொகுதி 5
பகுதி 4

உ

சிவ சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம்
வெளிவரும் சமய - இலக்கியத் திங்கள் இதழ்.

சிறப்பாசிரியர்,
பேராசிரியர்
திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-
திரு. மு. அருணாசலம், M. A., திருச்சிற்றம்பலம்
திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை
மகாவித்துவான் திரு. சு. தண்டபாணி தேசிகர், மதுரை
மகாவித்துவான்
திரு. சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலைநகர்
திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T.,
காஞ்சிபுரம்
புலவர் திரு. கீரன், லால்குடி
டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D.,
மதுரை
திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்
திரு. பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்

அட்டையில் :
கதிராமங்கலம்
ஸ்ரீ வனதுர்க்காதேவி

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்



# அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்**
**சுவாமிகள் அவர்கள்**

18666

எங்கும் நிறைந்த இறைவன் உயிர்களின் மாட்டுக் கொண்ட பெருங்கருணைத் திறத்தாலேயே பலதலங்களில் கோயில்கொண்டு எழுந்தருள்கிருன். அத்தலங்களில் பல தலங்கள் தனித்தன்மை பெற்றவையாகும். தனித் தன்மை பெற்ற தலங்களுள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர் என்பதும் ஒன்ருகும். இது மத்யார்ச்சுனம் எனப் புராணங்களால் புகழப் பெறுவது.

இடைமருதீசன் அருளும் திறத்தை அப்பரடிகளும்,

'பாதங்கள் பரவி நின்ற பக்தர்கள் தங்கள் மேலே
ஏதங்கள் தீர நின்ருர் இடைமரு திடங்கொண் டாரே'

என்று பாடிப்பரவுவார். இந்த இடைமருதூரில் இறைவன் தன்னைத் தானே பூசித்துக் கொண்டான் என்பது புராணம். வழிபாடு என்பது முறையானதாக அமைய வேண்டும். வழிபாடு குற்றமுள்ளதாக அமைந்தால் வழிபடாதவரின் பாவத்தைக் காட்டிலும் கடுமையான பாவங்கள் சூழும். தணியாத காதலுள்ள உமாதேவி பூசிக்கும் முறைமையை அறிவதற்காக - நாடகமாகச் சிவன் தன்னைத்தானே பூசித்துக் கொண்டான். அந்நிகழ்ச்சியால் உமையம்மை சிவனைப் பூசிக்கும் முறைமையை உணர்ந்தாள்.

சூழ்போய் நிவந்த ஆழ்கடல் உலகத்து
இன்னருள் திறத்தால் இடைமருது அமர்ந்த
பொன்அவிர் கடுக்கைப் புரிசடைப் புங்கவன்
அமையாக் காதல் இமய வல்லிக்கு
வழிபடல் முறைமை விழுமிதின் உணர்த்தத்
தானே தனனைப் பூசனை புரிந்தென.

இடைமருது மண்ணுலகில் உள்ளது. உலகு கடல் சூழ்ந்தது; உயர்ந்த மலைகளையுடையது; நான்கு திசைகளினுல் பரந்தது

சிவபெருமான் பொன்னிறம் அமைந்த கடுக்கை எனப் பெறும் கொன்றை மலர் மாலையை அணிந்தவன். புரிகளை உடைய சடைமுடியை உடையவன்.

இமயவல்லி என்பது தாட்சாயணி என்னும் திரு நாமத்தை உடையவளாகிய உமாதேவி. அவள் சிவபரம் பொருளிடத்தில் தணியாத காதலுடையவள். காதலில் தணியாத தன்மையாவது காலங்களினுல் மங்காமையும், துய்ப்பினுல் குன்ருமையும் ஆகும்.

வழிபடல் முறைமை என்பது பூஜை நியமங்கள். விழுமிதின் உணர்த்துதலாவது கிரமங்கள், உபதேசம் பெற்ருர்க்கே நியமங்களும் கிரமங்களும் கூடுவதாகும்.

பராசக்தியாகிய உமாதேவிக்கு உபதேசிப்பார் வேறொருவர் இன்மையின் சிவனே உணர்த்தினன்.

என — போல.

சிவபெருமானாகிய தன்னைப் பூசிக்கும் முறையை உமா தேவியாருக்குக் காட்டியது போல அடியார்களுக்கும் காட்டியருளல் வேண்டும். இப் பெருங் கருணைத் திறத்தினல், ஸ்ரீ மாசிலாமணியாக மண்ணுலகில் மானுட வடிவம் தாங்கி வந்தபோது இந்நிகழ்ச்சியைச் செய்து காட்டினன்.

ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்தார். அதுபோதும் அங்கயற்கண்ணி ஸ்ரீசொக்கநாதப் பெருமானின் இடப் பாகத்தில் அமர்ந்தருளியிருந்தார். சொக்கநாயகன் சிவந்த நீண்ட சடாமுடியுடன் இருந்தான்; ஸ்ரீமாசிலாமணி தேசிகர் உமாமகேஸ்வரனாக வீற்றிருந்த பரம் பொருளுக்குப் பதினாறு உபசாரங்களும் செய்து பூசித்தார். பதினாறு உபசாரங்களாவன :- ஆவாகனம், ஆசனம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம், ஸ்நானம், வஸ்திரம், எக்ஞசூத்ரம், பூசணம், கந்தம், அக்ஷதை, புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், அமுதவாசனம் என்பன. நீராசனம், தர்ப்பணம் பலார்ப்பணம், தாம்பூலம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், ஸ்தோத்திரம், புராண படனம், சத்திரம், சாமரம், விசிறி, மஞ்சம், சங்கீதம், நிருத்யம், வாச்சியம், ஆத்மாரோபணம் என்ற பதினாறை யும் உபசாரங்களாகக் கூறுவதும் உண்டு. தவிசளித்தல், கைகழுவ நீர் தரல், கால் கழுவ நீர் தரல், முக்குடி நீர் தரல். நீராட்டல். ஆடைசாத்தல், முப்புரிநூல்தரல் தேய்வை பூசல், மலர் சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும் புகை கூட்டல், விளக்கிடல், கற்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைக்காய்தரல், மந்திரமலரால் அருச்சித்தல் என்ற உபசாரங்கள் பதினாறும் அதிதி உபசாரங்கள் எனப்பெறும்.

கடவுளுக்குச் செய்யும் பதினாறு உபசாரங்களைச் சோடசோபசாரங்கள் என்று சிவாகமங்கள் கூறும். ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அவர்கள் 'ஈரெண் திறத்து உபசாரம்' எனக் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ மாசிலாமணி தேசிகரும் சொக்கநாதரும் வேறல்லவே. சொக்கநாதர்தாமே ஸ்ரீமாசிலாமணி தேசிகராக மானுட வடிவம தாங்கி மண்ணுலகிற்கு வந்துள்ளார். இவ்வகையில் ஸ்ரீமாசிலாமணி தேசிகர் சொக்கலிங்க நாயகனைப் பூசிப்பது தன்னைத்தானே பூசித்துக் கொள்வதாகின்றதே! அதுஏன்? முன்பு திருவிடைமருதூரில் உமையம்மை பூசனை முறைகளை அறிய வேண்டும் என்பதற்காகத் தன்னைத் தானே பூசித்துக் கொண்டது போலவே, இப்பொழுதும் தன் அடியவர் பூசனை முறைமைகளை நன்கு அறிதல் வேண்டும் என்னும் கருணையினால் சொக்கநாதனாகிய தம்மை, மாசிலாமணியாகிய தாமே பூசித்துக் கொள்கிறார்.

அருத்தியோடு எம்மைநம் உருத்திர கணங்கள்
தெரித்துமற்(று) இவ்வாறு அருச்சனை புரிதிர்என்று
அங்கயற் கண்ணி பங்கில்வீற் றிருந்த
செக்கர் வார்சடைச் சொக்கநா யகனை
ஈரெண் திறத்துஉப சாரமும் வாய்ப்பப்
பூசனை புரிந்த தேசிக ராய.

உருத்திர கணங்கள் என்பது அடியவர் திருக்கூட்டத்தைக் குறிக்கும். அடியவர்கள் பூசிக்க வேண்டும் என்பது ஆண்டவன் விழைவா என்று ஒரு வினா எழும். அடியவர்கள் ஆண்டவனை நெறியறிந்து பூசிக்க விழைகின்றனர். அதற்கு ஆண்டவனே உதவி செய்கின்றான். இதை அன்பு என்றுதான் குறிப்பிட வேண்டும். எனவேதான் "அருத்தியோடு எம்மை உருத்திர கணங்கள்,

தெரித்து மற்று இவ்வாறு அர்ச்சனை புரிதிர் என''
ஸ்ரீமாசிலாமணி தேசிகர் பூசித்ததாகக் குமரகுருபரர் அறிவிக்கிறார். அருத்தி என்பது பயன் கருதாத அன்பாகும்


'இடைமருதமர்ந்த புங்கவன் தானே தன்னைப் பூசனை புரிந்தென, 'சொக்க நாயகனைப் பூசனை புரியும் தேசிகராய' எனக் கூட்டிப் பொருள் காணவேண்டும்.

உமையம்மைக்கு அருளியது போலவே அடியவர்கட்கும் அருள் செய்தான் எனில் உமையம்மை போல அடியார்களும் சிவனுக்குச் சக்தியோ என் விபரீதம் தோன்றலாகாது என்பதற்காகவே, அடியார்கட்கு அருள் செய்யப் பூசிக்கும்போது பூசிக்கப் பெறும் சிவனுடன் உமையம்மையும் இருந்தாள் எனக் குறித்த சிறப்பு எண்ணியெண்ணி இன்புறற்பாலது.

பண்டார மும்மணிக் கோவையின் இருபத்து மூன்றாம் பாடலாகிய ஆசிரியப்பாவின் முதற்பகுதி இது. ஸ்ரீ மாசிலாமணி தேசிகராகிய சிவனின், அடியார் திருக்கூட்டத்தில் தாமும் ஒருவர் என்பதனை 'எம்மை' என்ற சொல்லால் உணர்த்துகிறார்.

'சிவனே உணர்த்த அவனைப் பூசிக்கும் முறைமையை யாம் உணர்ந்தோம்' என்ற அருள்ஞான அநுபவக் குறிப்பை இவ்விளிப் பகுதியில் நாமுணரத் தருகிறார்.

—சிவ சிவ



உ
சிவ சிவ

# திருவிடைமருதூரில் திருமுறை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் கயிலைமாமுனிவர்,

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

சுவாமிகள் அவர்களால் நடத்தப் பெறுவது.

துந்துபி ஆண்டு தைத்திங்கள் 15-ஆம் நாள் (28-1-83)
வெள்ளிக்கிழமை தைப்பூசம்

திருமுறைவாணர்கள்:-

தேவார இசைமணி

திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்,

ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி,

தேவார இசைநம்பி

திரு. S. கல்யாணசுந்தர தேசிகர்,

ஸ்ரீ காசிமடம் கட்டளை, கும்பகோணம்.

திரு. இராமச்சந்திர ஓதுவார். விருத்தாசலம்.

திரு. S. L. சாமி, பிடில், திருச்சி.

திரு. கோ. வேங்கடராமன், மிருதங்கம்,

திருப்பனந்தாள்.

திரு. S A. கோபாலன் வேய்ங்குழல், சிதம்பரம்.

இடைமருதுறையும் எந்தாய் போற்றி! பரவுக திருமுறை உலகெலாம்!

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்,
7 - 1 - 83

By order of His Holiness,
R. V. சுப்பிரமணியன்,
R. C மானேஜர், ஸ்ரீ காசிமடம்.

# மேல்மேல் உயரும் ஆன்மா

ஜலாலு ல் டீன். ரூமி

—o—

தமிழாக்கம் கோ. வன்மீகநாதன்

[library stamp]

உலோகமாய் (இருந்து)நான் இறந்தேன், ஒருசெடி ஆனேன்;
செடியாய்இறந்தேன், மிருகமாய் உயர்ந்தேன்,
மிருகமாய் இறந்தேன், மனிதனுனேன்.
நான் ஏன்பயப்படவேண்டும்? இறந்ததால்
நான் என்று குறைந்து போய்விட்டேனா?
மீண்டும் ஒரு முறை இறப்பேன் மனிதனுய் இருந்து,
உயர் திரு தேவர்களாக உயரவட்டமிட;
ஆனுல் தேவர் பிறவியையும் நான் கடந்தே
ஆகவேண்டும்; கடவுள் நீங்கலாக எல்லாம்
அழிந்து விடும்.
என்னுடை தேவ ஆன்மாவை நான் தியாகம் செய்தபின்
எவருடைய மனமும் இதுவரை கற்பனை செய்யாத
ஒன்ருக ஆவேன்;

ஆ! நான் இருப்பு இன்றிப் போவேனுக,
ஏனெனில் இருப்பு - இன்மை பேரிகை கொட்டி
பறை சாற்றுகின்றது, "அவனிடம் நாம் திரும்பிச்
செல்வோம்!" என்று.

குறிப்பு : இப்பாடலைப் படித்ததும் திருவாசகத்தின் பக்தர்களுக்கு நினைவு வரும், மாணிக்கவாசகப் பெருமான் தம் 'சிவபுராணம்' என்ற பதிகத்தில் "புல்லாகிப் பூடாகி" என்று தொடங்கி "மெய்யே! நின்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்' என்று பாடும் பகுதி. ஜலாலு - ல் டீன் ரூமி இன்று ஈரான் என்று அழைக்கப்படும் பெர்ஷியாவில் 13ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த மெய்ஞ்ஞானி.

# திருக்கணித பஞ்சாங்கம்

## தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

துந்துபி ஸு தை மீ (1983 - ஜனவரி — பிப்ரவரி)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்வ | ஆங்கிலவ | கிழமை | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | (14—1—83) | வெள்ளி | ●அமாவாசை 10-38 | உத்திராடம் நாள்முழுதும் |
| 2 | (15—1—83) | சனி | பிரதமை 13-19 | உத்திராடம் 7-17 |
| 3 | (16—1—83) | ஞாயிறு | துதியை 15-53 | திருஓணம் 10-18 |
| 4 | (17—1—83) | திங்கள் | திரிதியை 18-12 | அவிட்டம் 13-06 |
| 5 | (18—1—83) | செவ்வாய் | சதுர்த்தி 20-18 | சதயம் 15-37 |
| 6 | (19—1—83) | புதன் | பஞ்சமி 21-44 | பூரட்டாதி 17-43 |
| 7 | (20—1—83) | வியாழன் | சஷ்டி 22-45 | உத்திரட்டாதி 19-20 |
| 8 | (21—1—83) | வெள்ளி | சப்தமி 23-07 | ரேவதி 20-21 |
| 9 | (22—1—83) | சனி | அஷ்டமி 22-49 | அசுவனி 20-42 |
| 10 | (23—1—83) | ஞாயிறு | நவமி 21-47 | பரணி 20-22 |
| 11 | (24—1—83) | திங்கள் | தசமி 20-02. | கார்த்திகை 19-20 |
| 12 | (25—1—83) | செவ்வாய் | ஏகாதசி 17-39 | ரோகிணி 17-39 |
| 13 | (26—1—83) | புதன் | துவாதசி 14-43 | மிருகசீரிஷம் 15-26 குடியரசுநாள் |
| 14 | (27—1—83) | வியாழன் | திரயோதசி 11-21 | திருஆதிரை 12-47 |
| 15 | (28—1—83) | வெள்ளி | சதுர்த்தசி 7-42 ○பௌர்ணமி 27-56 | புனர்பூசம் 9-52 |
| 16 | (29—1—83) | சனி | பிரதமை 24-14 | பூசம் 6-51 ஆயில்யம் 27-54 |
| 17 | (30—1—83) | ஞாயிறு | துதியை 20-45 | மகம் 25-14 |
| 18 | (31—1—83) | திங்கள் | திரிதியை 17-41 | பூரம் 23-02 |
| 19 | ( 1—2—83) | செவ்வாய் | சதுர்த்தி 15-13 | உத்திரம் 23-26 |
| 20 | ( 2—2—83) | புதன் | பஞ்சமி 13-27 | அஸ்தம் 20-35 |
| 21 | ( 3—2—83) | வியாழன் | சஷ்டி 12-32 | சித்திரை 20-33 |
| 22 | ( 4—2—83) | வெள்ளி | சப்தமி 12-29 | சுவாதி 21-23 |
| 23 | ( 5—2—83) | சனி | அஷ்டமி 13-17 | விசாகம் 23-01 |
| 24 | ( 6—2—83) | ஞாயிறு | நவமி 14-51 | அனுஷம் 25-19 |
| 25 | ( 7—2—83) | திங்கள் | தசமி 17-01 | கேட்டை 28-07 |
| 26 | ( 8—2—83) | செவ்வாய் | ஏகாதசி 19-35 | மூலம் நாள்முழுதும் |
| 27 | ( 9—2—83) | புதன் | துவாதசி 22-20 | மூலம் 7-12 |
| 28 | (10—2—83) | வியாழன் | திரயோதசி 25-05 | பூராடம் 10-24 |
| 29 | (11—2—83) | வெள்ளி | சதுர்த்தசி 27-41 | உத்திராடம் 13-31 மகா சிவராத்திரி |
| 30 | (12—2—83) | சனி | ●அமாவாசை 30-08 | திருஓணம் 16-26 |

# சித்தாந்த சாத்திரங்கள்

மு. அருணாசலம் எம். ஏ.

## திருக்களிற்றுப்படியார்

இதுவரை திருவுந்தியார் வரலாற்றைக் கூறினோம். உந்தியார் செய்தவர் திருவிசலூர் உய்யவந்த தேவநாயனார் என்ற சிவஞானி. அவருடைய மாணாக்கர் ஆளுடைய தேவநாயனார் என்பவர். இவருடைய ஊரும் திருவிசலூர். இவர் தாம் தம்முடைய குருவான உய்யவந்த தேவரிடம் உபதேசம் பெற்ற திருவுந்தியார் என்ற அனுபூதி நூலைத் திருக்கடவூரில் பக்குவியாக இருந்த ஒருவருக்கு உபதேசம் செய்து அவருக்குத் தம் பெயராகிய உய்யவந்த தேவர் என்ற பெயரையே தீட்சாநாமமாக இட்டார் என்று வரலாறுகள் சொல்கின்றன. முன்னே குறிப்பிட்ட பொழிப்புரை, நமசிவாயத் தம்பிரான் விரிவுரை என்ற இரண்டு உரைகளும் இதே வரலாற்றைச் சொற்ப மாறுதல்களுடன் உரைக்கின்றன.

உபதேசம் பெற்ற கடவூர் உய்யவந்த தேவர் மூல நூலுக்கு வியாக்கியானம் போல நூறு பாடல்களில் ஒரு விரிவான நூல் செய்தார். இவ்வரலாறு முன்னே திருவுந்தியார் உரை அவதாரிகைகளில் கொள்ளப்பட்டது இதுசம்பந்தமாக வழங்கும் வரலாற்றை ஒட்டி இதற்குத் திருக்களிற்றுப்படியார் என்று பெயர் வழங்கும்; இப்பெயர் சம்பந்தமாக ஒரு வரலாறு உண்டு. இந்த இரண்டாம் உய்ய வந்தார் சைவ இனம் அல்லாத தாழ்ந்த குலம் என்று கருதப்பட்ட ஆட்டு வாணியர் குலத்திலே பிறந்தவர் என்று சொல்லப்படுவார். ஆட்டு வாணியன் ஆட்டிறைச்சி வியாபாரம் செய்பவன். இவன் கொலைகாரன் என்றும் கருதுவர்: ''காதுகனான ஆட்டு வாணியன்'' என்று பிள்ளைலோகாச்சாரியர் (14 ஆம் நூற்றாண்டு) தமது ஸ்ரீவசன பூஷணத்தில் சொல்லுவார்: (காதுகன் - கொலைகாரன்) ஆனால் ஞானம் ஓர் இனத்தாருக்கு மட்டும் உரிய சொத்து அல்ல.

அறிவுடைய ஒருவனை அரசனும் விருப்புவான் அல்லவா? இவர் தம்முடைய ஞான முதிர்ச்சியினாலே செய்த நூலை மேல் இனத்தார் இவருடைய குலம்பற்றித் தாழ்வாக எண்ணினார்கள். அதைப் பயிலலாகாது என்றும் கருதினார்கள். ஆயினும் சில அறிஞர் இந்த நூல் பெருமானுக்கு உவப்பானதா என்று அறிந்து கொள்ளலாம் என்று திட்டமிட்டு இந்த நூலைச் சிதம்பரத்தில் நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ள சிற் சபைக்குப் போகும் படிகளாகிய பஞ்சாட்சரப் படியில் அடிப்படியில் வைத்தார்கள். அப்போது பெருமான் திருவருளால், படியின் இரு புறமும் உள்ள கல்யானை ஒன்று தன் துதிக்கையால் இந்த நூலை எடுத்து எல்லாவற்றிற்கும் மேல் படியிலே, அதாவது நடராஜப் பெருமான் பாதத்தின் அருகிலே, கொண்டு போய் வைத்தது: பார்த்தோர் வியந்து இந்த நூலைச் சிரமேற் கொண்டு போற்றினார்கள். அது முதல் இந்த நூல் உந்தியார் ஒப்ப சிறந்த சாத்திரமாகக் கொள்ளப்படுகிறது.

பொதுவாக இந்த வரலாறே வழங்கி வருகிறது. கொன்றைமா நகரம் சண்முக சுந்தர முதலியார் பதிப்பில் இது பற்றிப் பின் வரும் குறிப்புக் காணப்படுகிறது:

''வடநாட்டு உய்யவந்ததேவர் தமது சிஷ்யர் திருவியலூர் ஆளுடையதேவருக்குச் செய்து தந்த திருவுந்தியார் சொற் சுருங்கி அர்த்தம் ஆழ்ந்திருப்பதை யாவரும் உணர்தல் அரிதெனக் கருதி, அதனுள்ளுறையாக அவ்வுந்தியின் தலைக் குறிப்பினையே இவ் வெண்பாக்களில் அமர்த்தி விரித்தோதினர். இவர் திருவியலூர் ஆளுடைய தேவர் சிஷ்யரும், வடநாட்டு உய்ய வந்த தேவர் சந்தானத்தைச் சேர்ந்தவருமாவர்''.

வடநாட்டு உய்ய வந்த தேவர் சந்தானம் என்று இவர் கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை ஆயினும், முற்கூறிய பழைய உரையிற் காணும் வரலாற்றால், திருவியலூர் உய்யவந்த தேவரின் மாணாக்கரின் மாணாக்கர் திருக்கடவூர் உய்ய வந்த தேவர் என்பது தெளிவு இந்நூலின் 9ஆம் பாடல் இதையே குறிப்பிடுகின்றது.

ஆளுடையான் எந்தரமும் ஆளுடையா னேஅறியும்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல் - நாளும்
திருவிசலூர் ஆளும் சிவயோகி என்றன்
வருவிசையை மாற்றினான் வந்து:

முற்கூறிய கல்லானை வரலாற்றுச் செய்தியை கி. பி. 1750 இல் வாழ்ந்த பெரும்புலவரான தில்லைவிடங்கன் மாரிமுத்துப் பிள்ளை என்பவர் தாம்பாடிய புலியூர் வெண்பாவில் (78) குறிப்பிடுகிறார்;

வாட்கைஅச வாணிபன்சொல் மாநூலி னைப்படிக்கற்
பூட்கைஎடுக் கக்கொள் புலியூரே - தாட்கமலப்
போதுளவ னத்தன் புருகூதன் போற்றும் அந்திப்
போதுளவ னத்தன் புவி.

இதனால் இவ்வரலாறு மிகவும் பழமையானதென்றே கருதலாம்.

இவ்வாசிரியர் தம்முடைய நூலை முற்றிலும் அனுபூதி நிலையில் எழுந்த திருவுந்தியார் சூத்திரங்களுக்கு வியாக்கியானமாகவும், விளக்கமாகவும், வரலாற்று எடுத்துக்காட்டாகவும் செய்திருக்கிறார் இதனைப் பின்னால் ஓர் அட்டவணையாக எடுத்துக்காட்டுகிறோம். இது ஆகமப் பொருளை விளக்கியது என்பது ஆன்றோர் கூற்று. ''இதன் பொருளைக் குருமுகமாய் அறிக'' என்பதே மரபு.

15 ஆம் நூற்றாண்டில் சிறந்த வேதாந்த ஞானியாய்த் தோன்றி எண்ணற்ற வேதாந்தச் சாத்திரங்களைப் புதிதாகச் செய்து தமிழுக்கு வளம் தேடிய தத்துவராயர் என்ற பெருஞானி, தம்முடைய 2821 பாடல் கொண்ட சிவப்பிரகாசப் பெருந்திரட்டு என்ற வேதாந்தத் திரட்டு நூலில் திருக்களிற்றுப் படியார் பாடல்கள் மூன்றை மட்டும் சேர்த்து இருக்கிறார். இவை 5, 6, 12 ஆகிய பாடல்கள். ஏனைய சித்தாந்த சாத்திரப் பாடல்களில் எதையும் இவர் தொகுக்க வில்லை. வேதாந்தியான இவர் இந்த நூலின் கருத்துக்கள் மட்டும் தம் கொள்கைக்கு முரண் இல்லாதவை எனக்கருதினர் போலும்.

உந்தியார் எவ்வாறு அழகான தமிழில் தாழிசை யாப்பில் சுவைபடச் செய்யப்பட்டு உள்ளதோ அதுபோல. இந்த நூலும் வெண்பா யாப்பில் அழகாகச் சூத்திரம் போலத்தான் செய்யப் பட்டுள்ளது. பல நாயன்மார் வரலாறுகள் பக்திப் பெருக்கோடு குறிப்பிடப் படுகின்றன. பழமொழிகளும், இந்நூலில் அதிகம். பண்டைய சாத்திர உரையாசிரியர்களான மதுரைச்சிவப் பிரகாசர் போன்றோர் தம் உரைகளில் இந்நூற்பாடல்களைப் பெருமையோடு எடுத்துக்காட்டுகிறார்கள். அடுத்து இந்த நூலின் பதிப்பையும், உரைகளைப் பற்றியும் பேசுவோம்.

## ஸ்ரீ காசிமடத்தின் புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| திருவருட்பயன் (விளக்க உரையுடன்) | விலை ரூ. 1-50 |
| நீதிநெறிவிளக்கம் ,, | விலை ரூ. 1-50 |
| உண்மைநெறி விளக்கம் ,, | விலை ரூ. 0-75 |
| கந்தர்கலி வெண்பா ,, | விலை ரூ. 1-50 |
| உண்மை விளக்கம் ,, | விலை ரூ. 1-00 |
| திருவுந்தியார் ,, | விலை ரூ. 1-25 |
| கொடிக்கவியும் வினாவெண்பாவும் ,, | விலை ரூ. 0-75 |
| திருக்களிற்றுப்படியார் ,, | விலை ரூ. 1-50 |
| இருபா இருபஃது ,, | விலை ரூ. 1-25 |
| போற்றிப் பஃறொடை ,, | விலை ரூ. 1-25 |
| நெஞ்சுவிடு தூது ,, | விலை ரூ 1-50 |
| திருக்குறள் ஒரு பொதுமறை | விலை ரூ. 3-00 |
| மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-கருத்தரங்கக் கட்டுரைகள் | விலை ரூ. 3-00 |
| திருவாசகம்-ஆங்கில மொழிபெயர்ப்பு (கோ. வன்மீகநாதன்) | விலை ரூ. 15-00 |
| திருவருட்பயன்-நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன் | ரூ. 5-00 |
| அபிராமி அந்தாதி தெளிவுரையுடன் | விலை ரூ. 1-00 |
| திருவிளையாடற்புராணம் (உரைநடை மதுரைக்காண்டம்) | விலை ரூ 4-00 |
| திருவிளையாடற்புராணம் (உரைநடை கூடற்காண்டம்) | விலை ரூ. 3-50 |
| திருமுறைகண்ட புராணம் சேக்கிழார் புராணம் | விலை ரூ 0-75 |
| திருத்தொண்டர் புராணம் (மூலம்) | விலை ரூ. 12-00 |
| திருத்தொண்டர்புராணம் (உரைநடை) | விலை ரூ. 12-00 |
| Peeps in to the Cultural Heritage of Hinduism (M. ARUNACHALAM.) | விலை, ரூ, 25-00 |
| கந்தபுராணம் மூலம் 2ம் பகுதி (பழையபதிப்பு) | விலை ரூ. 4-00 |
| திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் (திருமுறைக் கலைஞர் க. வெள்ளைவாரணனார்) | விலை ரூ 3-25 |

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு.

ரூ: 1000/க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு அனுப்புகைச்செலவு இலவசம்.

முகவரி;- மேலாளர்:
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612504
(தஞ்சை மாவட்டம்)

# நூல் நிறை

## ஸ்ரீ சிதானந்த விஜயம்.

[ஆசிரியர். ஜி. நாராயணன்: வெளியீடும் கிடைக்குமிடமும்:– ஸ்ரீகுஹானந்த மண்டலி, 125, கல்லூரிச்சாலை, நங்கைநல்லூர், சென்னை-61; பக்கம்: (22+130) விலை குறிப்பிடப் பெறவில்லை.]

'அருட்கவி' ஸ்ரீ சிதானந்த நாதரின் தெய்வீகம் பொருந்திய வாழ்க்கை வரலாற்றுச் சிறப்பினைச் சித்தரிப்பதாக அமைந்துள்ள இந்நூலின் தொடக்கத்தில், தந்தை எனும் உலகியல் நோக்கி நூலாசிரியரின் தந்தை வழங்கியுள்ள ஆசி, நூல்முழுமையும் படித்தபின் ஏற்படுகின்ற கருத்துத் தெளிவை, முன்னுணர்த்துகின்றது.

பண்டை நற்றவத்தால், புகழொடு தோன்றி, இறைமைக் குணங்கள் கைவரப் பெற்று ஸ்ரீ வித்யா மஹா ஷோடசியை உபாசனை செய்து உயர்ந்த பெருநெறியில் ஞானவானுக வாழ்ந்தருளிய சிதானந்தரின் வாழ்க்கையினை ஆற்றொழுக்காக ஆசிரியர் கொண்டு செல்லும் திறம் சிறப்பானது.

தணிகைமணி, வ. சு. செங்கல்வராயபிள்ளை, வெண்பாப்புலி, வேலுசாமிப் பிள்ளை முதலிய தமிழ்ச் சான்ரேர்களின் வரலாறும், பணியும் ஆங்காங்கு எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

நூலாசிரியரின் சிறந்த புலமையும், வேத,தோத்திர நூல் பயிற்சியும் அவரின் தக்க மேற்கோள்களால் வெளிப்படுகின்றது.

குருநாதனிடம் குறைவிலா அன்புடன், அவன் சொல்வழி செயல்பட்டு சதா சர்வ காலமும் குருவின் உருவையே சிந்தித்து வழிபட்ட சிதானந்தரின் வாழ்க்கை குருபக்திக்குத் தக்க எடுத்துக் காட்டாக அமைகின்றது.

நூலின் இறுதியில் சிதானந்தரின் அரிய நூல்கள் பற்றிய விளக்கம் இணைக்கப் பெற்றுள்ளது.

எளிய, இனிய நடையில் அமைந்து, கற்பார்க்கு விருப்பூட்டும் காவியமாக இந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

## அபிநய தர்ப்பணம். (மூலமும் உரையும்)

(தமிழ்மொழிபெயர்ப்பு: வீர ராகவையன்; வெளியீடும் கிடைக்குமிடமும்: டாக்டர் உ. வே. சாமிநாதையரி நூல் நிலையம்; சென்னை-41: பக்கம்: 10 + 158; விலை-ரூ. 15/-)

டாக்டர் ஐயரவர்களின் நூல் நிலைய வெளியீடாக பதிப்பிக்கப் பெறும் நூல்களின் சிறப்பினைத் தமிழ்கூறு நல்லுலகம் முற்றிலுமாக உணர்ந்துள்ளது. அவ்வகையில் இந்நூலின் பெற்றியினை நன்குணர முடிகின்றது.

'நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து' என்பது சிலம்பு; முத்தமிழுள் மூன்றுவதாகிய கூத்துக்கலை காலங் கடந்த பழமையும், பெருமையும் நிரம்பியது. இனித்தமுடைய பொற்பாதத்தை எடுத்து ஆடுகின்ற கூத்தனின் திருநடனச் சிறப்பைப் பரவிய அருட்பாடல்களுக்குக் கணக்குண்டோ?

அபிநயம் பற்றி ஐயரவர்கள் நூலக வெளியீடாக முன்வெளி வந்த அபிநயதர்ப்பண விலாசம் எனும் நூலில் காணப் பெறும் விரிவான செய்திகளைச் சுருக்கி அபிநயங்களை மட்டும் கூறுவதாக பெயருக்கேற்றபடி (தர்ப்பணம்) அமைந்திருக்கிறது இந்நூல்.

அபிநயம் தொடர்பான குறிப்பிடத்தக்க கருத்துக்கள் நூலுக்கு முன்னும் பின்னும் இணைக்கப் பெற்றுள்ளன.

அந்தாதி வடிவில் அமைந்துள்ள இந்நூலின் பாடல்களில் அபிநயம் முன்பகுக்கப் பெற்றுப் பின் அதற்கேற்ப விரிக்கப் பெறுகிறது.

பாடற்பொருள் இலக்கணம், வினியோகம் எனும் தலைப்புக்களில் விளக்கப் படுகிறது.

பாடல்களுக்கு ஒத்த வடமொழிச் சுலோகங்கள் ஆங்காங்கே எடுத்து மொழியப் படுகின்றன.

அபிநய பேதங்கள் எளிதில் விளங்கும் பொருட்டு ஏற்ற படங்கள் இடம் பெறுகின்றன.

கருத்து, கோர்ப்பு, அச்சு, மேல் தோற்றம், முகப்பு ஆகிய எல்லாவற்றிலும் உயர்ந்ததாய் ஆடவல்லானின் திருநடக் காட்சியுடன் விளங்குகிறது இந்நூல்.

புலவர். முருகு சுவாமிநாதன்,
எம். ஏ. பி. லிட்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா

L P. இசைத்தட்டுக்கள் (E. C. S. D. 35503)

கயிலைமாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

தி கிராமபோன் கம்பெனி ஆப் இந்தியா வினரால்

வெளியிடப் பெற்றவை.

பாடியவர் : டாக்டர் சேலம் ஜெயலட்சுமி.

திருக்கோவில்கள், திருமுறை விழாக்கள், பொதுக்கூட்டங்கள் தெய்விக நிகழ்ச்சிகள் ஆகியவைகளில் கந்தன் அருள் கவிதை ஒலியைப் பரப்பி அருள் நலம்பெறுக!

விலை. ரூ. 41/: அனுப்புகைச் செலவு தனி.

விபரங்களுக்கு, மேலாளர்,

ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் -612 504.


Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

**நடராஜ விலாஸ்**

**ஜுவல்லரி ஹால்**

**சிதம்பரம்**

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்.

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.

தென்னார்க்காடு மாவட்டம் — 608 001.

# ஆலய பூஜை படிக்காசு நிதிக்கு

## நன்கொடையளித்த அன்பர்கள் விவரம்.

| | | |
|---|---|---|
| | 2—12—82 வரை கூடுதல் | ரூ. 14,712 - 10 |
| 1. | திரு. M. S. ரெங்கராஜன், சேலம். | ரூ. 51 - 00 |
| 2. | திருமதி. V. இராஜம், சென்னை. | ரூ. 5 - 00 |
| 3. | திரு. T. M. வெள்ளைவாரணம், பனசை. | ரூ. 20 - 00 |
| 4. | திரு. அப்பு. துர்க்காகுடில், கும்பகோணம். | ரூ. 5 - 00 |
| | 1—1—83 வரை கூடுதல் | ரூ. 14,793 - 10 |

---

# ஸ்ரீ குமரகுருபரர்

## சமய இலக்கியத் திங்கள் இதழ்

### சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ. | 100-0 |
| ,, | (வெளிநாடு) | ரூ. | 125-00 |
| ஆண்டு சந்தா | (உள்நாடு) | ரூ. | 7-50 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. | 10-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. | 12-00 |

### விளம்பரக் கட்டண விகிதங்கள்

| | | |
|---|---|---|
| அட்டை பின் பக்கம் 2 வண்ணங்கள் | ரூ | 150-00 |
| முன் அட்டை உள்பக்கம் | ரூ. | 125-00 |
| பின் அட்டை உள் பக்கம் | ரூ | 100-00 |
| உள்முழுப்பக்கம் | ரூ. | 60-00 |
| உள்அரைப்பக்கம் | ரூ. | 30-00 |

# பன்னலம்

வித்துவான். தா. குருசாமி தேசிகர். மது...

52
16-1-...

முன்னுரை:

நலம் என்பது நன்மையாகும். பண்படியாகப் பிறந்த நலம் என்ற இச் சொல் வலம்பெற்று விளங்குகிறது. திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியார் திருப்பதிகத்தின் கடைப்பாசுரத்தில் நலங்கள் பலவற்றை அருளிச் செய்கின்றார்

பன்னலம் புணரும் பாண்டிமாதேவி
குலச் சிறையெனும் இவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவாயீசன்
திருவடி ஆங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞானசம்
பந்தன் செந்தமிழ் இவை கொண்டு
இன்னலம் பாட வல்லவர்-
-இமையோரேத்த வீற்றிருப்பவர் இனிதே.

—இத்தேவாரப் பாசுரத்தில் காணப்படும் நலங்களில் பன்னலமே ஈண்டு சிந்தித்தற்குரியது.

நலம் என்பதன் பொருள்:

நன்மை என்பதே நலத்திற்குப் பொதுவான பெயருமாகும். திருவள்ளுவர் குறளின் 'நலம் வேண்டின்' என்ற குடிமை அதிகாரத் தொடர்க்கு, 'நலம்' - புகழ் புண்ணியங்கள், என்று பரிமேலழகர் பொருள் காண்கின்றார். மணிவாசகப் பெருமான் திருவாக்கில்* இறைவன் பால் கலந்த அன்பு உடையவராகிக் கசிந்து உள்ளுருகி விளங்குதலே 'நலம்' என்று காணப்படுகின்றது. இத்தகு சிறப்புப் பொருளைக் கொண்டு விளங்கும் 'நலம்' பல பொருளுடையது போல் காணப்படுகிறது. அப்பல நலங்களையே சம்பந்தப்பெருமான் பன்னலம் என்றார். நலத்தைப் புகழ் புண்ணியம் என்ற இரண்டில் அடக்கினார் பரிமேலழகர்.

புகழ் – புண்ணிய விளக்கம்:

'புகழ்' என்பது இவ்வுலகில் இறவாது நிற்கும் கீர்த்தி. 'புண்ணியம்' என்பது நற்செயல்.

---

* 'கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும், நலந்தான் இலாத சிறியேற்கு' - சிவபுராணம் - திருவாசகம்.

மங்கையர்க்கரசியார்- குலச்சிறையார் ஆகிய இருவருமே புகழின் வடிவம்; புண்ணியத்தின் திருவுருவம். புகழுக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் மங்கையர்க்கரசியார்; புண்ணியச் செயலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் குலச்சிறையார். மங்கையர்க்கரசியார் திருவாலவாய்த் திருப்பணியில் இடையறாது நின்ற பெருமையும் புகழும் உடையவர்; குலச்சிறையார் அமைச்சர் ஆதலின் புண்ணியச் செயல்களில் பொலிந்து தலை நின்றவர். ஆகவே இவரின் புகழ் புண்ணியங்களை சம்பந்தப் பெருமானின் வாக்குகளைக் கொண்டு முறைமைப்படுத்துவோம்.

மங்கையர்க்கரசியார் புகழ்:

பிறந்த இடச் சிறப்பும் புகுந்த இடச் சிறப்பும் மிக்குடையவர். உறுப்பு நலன்கள் பொலிந்தவர்; திருநீற்றன்புமிக்குடையவர் மணிமுடிச் சோழனின் மகளார்; இன்மொழியால் உலகை வாழ்விப்பவர்- என்றும் பாண்டிமாதேவி என்ற பெருமையுடையவர் என்றும்- இத்தகைய புகழ் வாய்ந்த பெருமாட்டியாகிய அம்மையார் திருவாலவாய் இறைவனை நாடோறும் பரவி வழிபட்டவர் என்றும், கோயிற் பணியில் மேம்பட்டவர் என்றும், திருஞானசம்பந்தர் ஐந்து பாடல்களில் விளக்குகின்றார். இப்பாசுர உண்மையால் வழிபாடும்- பணியும் இரண்டு கண்கள் என்று மேன்மக்களுக்குச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

குலச்சிறையாரின் புண்ணியச் செயல்கள்;

அடியார்க்கு அடியார்; அருட் பணிபூண்ட அமைச்சர்; அடியவர் பால் தணியாத அன்பு கொண்டவர்; தவப்பணியில் தலைநின்றவர்; திருவைந்தெழுத்து — திருவேடம் இவற்றின்பால் தணியாத காதல் கொண்டவர்; தொண்டர்சீர் பரவுவாராக விளங்கியவர்-என்று ஐந்து பாசுரங்களில், அடியார் அன்பும் அயரா அரன்கழலன்பும் விதந்து ஓதப்படுகின்றன.—இத்தகைய நலன்களையே திருஞான சம்பந்த சுவாமிகள் 'பன்னலம்' என்று போற்றினர்,

மேதகு நன்மை:

அன்பே உண்மையாக அமர்ந்தவர் கடவுள்; அக்கடவுளை அன்பே உண்மையாகக் கொண்டு வழிபாடாற்ற வேண்டும்* என்பது முடிந்த முடிபு. நமது அருளாளப் பெருமக்கள் முடித்துக் காட்டுவதில் வல்லவர்கள். என்னபுண்ணி

* Love and truth are form of God in sooth worship Him with heart-felt Love and truth —Pilgrim Page-14

யம் செய் நனெ நெஞ்சமே!—என்று விளித்து. திருவலஞ்சுழிவாணனை வாயாரப்பன்னி, ஆதரித்து வழி படுதற்கு—என்று சம்பந்தப் பெரு மான் வினவுகின்றார். இவ்வுயர்ந்த வழிபாட்டுச் சிறப்பே மேதகு நன்மை என்பது அறிபத்தக்கது

பன்னலம் புணர்ந்த தன்மை:

குலச்சிறையார்— மங்கையர்க் கரசியார் இருவரும் பெற்றிருந்த நலன்களின் தொகுப்பே புகழ்— புண்ணியம் என்பன. இவைநன்கு புணர்ந்திருந்த தன்மையை ஒரு முறை மங்கையர்க்கரசி பதிகம் முழுவதையும் ஓதி உணர்ந்தால்- அவர்கள் இருவரும் பெற்றிருந்த பேறு முழுவதும் உணரலாம். பதினாறு பேறுகள் என்று கூறுவர். அப்பேறுகளின் முடிமணியாக திரு வடிப்பேறு பெற்ற பெருஞ்சிறப்பு இருவரிடமும் காணப்படுகிறது.

புணர்ந்த தன்மை:

நலன்கள் பலவற்றில் புறநலன் அகநலன் என்றுபிரிக்கப்படும். மங் கையர்க்கரசியார் இவ்விருநலன் களும் வாய்க்கப்பட்டிருந்ததைப் பதிகம்உணர்த்திச்செல்கிறதுகுலச் சிறையாரும் அப்படியே. எடுத்துக் காட்டாக புறத்தே அவர் மந்திரி யாகக் காட்சியளிப் பினும், அகத் தே 'வெள்ளைநீறணியும் கொற்ற வனுக்கு மந்திரி' என்று அவர், அகமுகவெற்றி உணர்த்தப்படு. கிறது. மங்கையர்களுக்கு அரசி உமா தேவியாரே அத்தேவியின் ஒருகூறுபோல அரசியார் காணப் படுகிறார்— என்பது உய்த்துக் காணத்தக்க அரிய செய்தியாகும்

முடிவுரை:

இதுகாறுங் கூறியவாற்றால் உயர்குடிப்பிறப்பினர்க்கு நலன் கள் பல இயல்பாகவே அமையும். அந்நலமுடையார் வழிபடும் மேன்மை பொருந்திய நலம் எது வோ அது போற்றத்தக்கது— என்று பலசுருதி அமைந்துள்ளது. தமிழ்ப்பாட்டு 'இன்னலம்' என்று புகழப்பட்டது. பன்னலத்தின் பாங்கினைப் பதிகம் முழுவதும் ஓதிஉணர்ந்தால் அறியலாம். நலத்தின்கண் தலைப்படுவோமாக

---


## 'ஸ்ரீ குமரகுருபரர்'
## சமய இலக்கியத் திங்களிதழ்

தங்கள் சந்தா முடிவடைந்ததும் அன்புகூர்ந்து சந்தாத் தொகையனுப்பிப் புதுப்பித்துக் கொள்வதோடு, தொகை அனுப்பும் பொழுது, சந்தா எண்ணைக் குறித்தும், சந்தாஎண் நினைவில்லையெனின் 'தொடர் சந்தா' என்று எழுதியும் உதவ வேண்டுகிறேன்.

ஆண்டுச்சந்தா ரூ. 7-50 ❋ ஆயுட் சந்தா ரூ. 100

நன்றியுடன், நிர்வாக ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபரர்,
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்-612504 தஞ்சை மாவட்டம்.

# ஈசனார் முனிவு



புலவர். முருகு. சுவாமிநாதன். எம், ஏ. பி. லிட்.

உலகம் புரந்தருளும் ஒண்பொருளை, உலக முதல்வனை ஐந்தொழில் முதல்வனாகக் கண்டு போற்றுவது தமிழ் இலக்கிய மரபு; பரம்பொருள், ஐந்தொழில் இயற்றும் அருட்பாங்கை,

கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

என்றும்,

''ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய்'' என்றும்

மணிவாசகர் வியப்பார். இவ்வாற்றான் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் இயற்றுகின்ற இறைவனின் திருவுளத்தில் முகிழ்க்கும் நேசமே – உயிர்கள் மாட்டு அவன் காட்டுகின்ற அளவில்லாத அன்பே – இவ்வைந்தொழிலைச் செய்யக் காரணமாகிறது என்பதைக் கண்டு காட்டிய பேரருளாளர்கள் பலர்.

ஆக்கல் என்பதற்கு அடிப்படைக் காரணம் ஆன்மாக்களிடத்து இறைவன் கொண்ட அன்பு எனில் பொருந்தும். காத்தல் என்பது பெயரளவிலேயே இறைவன் உயிர்கட்குச் செய்கின்ற தன்மையைக் குறிப்பதால் அதுவும் ஒத்ததே. அழிப்பது எனும் தொழில் எவ்வாறு அன்பின் அடிப்படையில் அமையும் என்பது வினா அதற்கு அடிப்படையான சில கூறுகளைக் கண்டு அவை அனைத்துமே ஈசனின் பரிவினால் ஏற்படுபவையே என்பதைத் துணியலாம்.

உயிர்கள் செய்கின்ற வினைகள் அவற்றின் மறுபிறப்பிற்கும், மறுபிறப்பில் அவை எய்துகின்ற நன்மை, தீமைகட்கும் காரணம் என்பது பொதுவான கருத்து. உயிர்கள் செய்கின்ற வினை (கன்மங்)களை இரண்டாகப் பகுத்துக் காணும் ஞானநூல்கள், அவை இதம், அகிதம் என இரண்டாகும். இதம் என்பது மனம், மொழி, மெய்களால் உயிர்க்கு உறுதியென்று வேதாகமங்கள் குறிப்பிட்டவற்றைச் செய்தல். அவ்வாறு செய்யாமல் அதற்கு மாறானவற்றைச் செய்தல் அகிதம் எனப்படும். இதம் - அகிதம் என இவ்விரண்டினுள் எதைச் செய்யினும் அதனை இறைவன் ஏற்றுக் கொள்வான்.

வித்திட்டாயிற்று. விளைப்விளை பெறவேண்டுமே; யார் அதைக் கொடுப்பது? அதன் தன்மை என்ன? எனும் வினுக்கள் எழும். வித்திட்டவன் விளைவைப் பெற்றே ஆகவேண்டும். இறைவனே அவற்றை அவர்களிடத்து எய்துவிப்பான்; எவ்வாறு? அறமிகுந்த இதம் செய்வாருக்கு அநுக்கிரகம் புரிவான்.

அறமலி யிதஞ்செய் வோருக்
கநுக்கிர கத்தைச் செய்வன்'

மறத்தன்மை கொண்ட 'அகிதம்' செய்தால் அவருக்கு நிக்கிரகம் புரிவான். ''மறமலி அகிதஞ் செய்யின் நிக்கிரகந்தை வைப்பன்''

அந்த அநுக்கிரகத்துக்கு, அன்பு அடிப்படை என்று கூறினுல் அது அனைவரும் ஒப்புக் கொள்வதே யாகும். ஆனுல் நிக்கிரகம் செய்தலுக்கும் ஈசன் உயிர்கள் மாட்டுக் கொண்ட அன்பே காரணம் எனில் அது யாங்ஙனம் பொருந்தும்? நிக்கிரகக் காரணம் அன்பின் மேற்று என்பார் அதற்குக் கூறும் விளக்கம் என்ன?.

செய்யக் கூடாத தீச்செயல்களைப் புரிவாரைக் கண்டு, அவ்வாறு அவர்கள் செய்த குற்றத்தைக் கண்டித்து அச்சுறுத்தி நீக்குவான்: அதோடு அறத்தினைச் செய்ய வேண்டிய முறைமை இது; இந்நெறியில் அறம்செய்; என்று உணர்த்துவான்.

'அக்கிர மத்தால் குற்ற மடித்துதீர்த்
திச்சம் பண்ணி
இக்கிர மத்தி ஞலே யீண்டற மியற்றி
டென்பன்'

என்னும் மெய்கண்ட நூல். அநுக்கிரகம், மறைத்தல் ஆகிய எல்லாமே ஈசனரின் அருளின் அடிப்படையில் அமைந்ததே என்பதை அருணந்திதேவர்,

'எக்கிர மத்திஞலு மிறைசெய லருளே
என்றும்'

என்று, எடுத்துக்காட்டுவர்:

செய்கின்ற செயல் துன்பத்தைத் தருவது. உயிர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதது. அப்படியிருக்கையில் அதனை அன்பினுல் செய்தது என்று கூறுவது வியப்பாகவன்றே இருக்கிறது? இன்பம் ஊட்டுவதும் இயைந்துபழகுவதும் அல்லவா அன்பு அடிப்படைச் செயல்கள்? இவை சிறிதும் கலவாத துன்பச் செயலை எவ்வாறு அன்பின் அடிப்படையில் செய்யப் படுவது என்று கூறுவது? எனும் தொடர்ச்சியான வினுக்கள் எழும்.

ஆன்மிகத்தானும் பௌதிகத்தானும் உயிர்கட்கு வரும் நோய்கள் பல.

மாறுபா டில்லாத உண்டி
மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு.

என்பர் வள்ளுவர். இவ்வாற்றான் உயிர்கட்கு வரும்நோய்களை நீக்க உரிய மருந்துகளை அளிப்பான் மருத்துவன். பழக்க வழக்க மாற்றத்தான அன்றி தெய்வீகத் தான் வருகின்ற பிணிகளைத் தானம், ஓமம், பூஜை முதலியவை செய்து நீக்குவான் அதுபோலவே சிவபெருமானும் உயிர்களுக்கு வரும் இருவினையைப் பலதிருத் தானும் அனுபவிக்கச் செய்தே கழிப்பான்.

அதே மருத்துவன் சில நோய் களுக்கு அறுத்தல், கீறுதல், நெருப்பிட்டுச் சுடுதல் முதலான சஸ்திர சிகிச்சை அளிப்பான். அவை நோயுடையார்க்குத் துன்பம் அளிப்பதாக இருக்கும். மற்றும் சில நோய்களுக்கு சர்க்கரை, பால் இவற்றை மருந் தோடு கலந்துண்ணும்படி அறிவுரை பகருவான். இவை மிகுந்த இன்பத்தை அளிக்கும் மருந்துகளாக அமையும். மருத்துவன் இன்ன நோய்க்கு இவ்வாறு சிகிச்சையளிக்க வேண்டும் என்று தெரிந்திருப்ப தால் அவ்வவற்றுக்கு உரியவாறே செய்வன். இறைவனும் இன்பமும், துன்பமுமாகிய மருந்துகளை நுகரச் செய்து இரு வினையாகிய நோயைத் தீர்ப்பான்.

மருத்துவ னுரைத்த நூலின்
வழிவரிற் பிணிகள் வாரா
வருத்திடும் பிணிகள் தப்பின்
தப்பிய வழியுஞ் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யா
துறும்பிணி சென்றும் தீர்ப்பன்
உரைத்தநூல் சிவனு மின்னே
உறுங்கன்மம் ஊட்டித் தீர்ப்பன்'

மண்ணுளே சிலவி யாதி
மருத்துவ னருத்தி யோடும்
திண்ணமா யறுத்துக் கீறித்
தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாம்
கண்ணிய கட்டி பாலும்
கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்பத் துன்பம்
அருத்தியே வினைய றுப்பன்.

எனும் பாடல்கள் மேற்கண்ட கருத்துக்களை முகந்து நிற்பன.

மருத்துவனின் அறுத்தல், கீறு தல், நெருப்பிட்டுச் சுடுதல் முதலான செயல்கள் நோய்கண் டார்க்குத் துன்பம் அளிப்பதாக இருப்பினும் அதுவும் அவர் நன்மைக்கே. அவர்க்கு உண்டாகி யுள்ள நோய் தீரவேண்டும் என் னும் நல்லெண்ண அடிப்படை யிலேயே மருத்துவன் இவ்வாறு செய்கின்றான். ஒன்றுமறியாத குழந்தைகள் தவிர மற்றையோர் மருத்துவனின் இச்செயல் கண்டு வெகுள்வதில்லை. அவனை வெறுப் பதுமில்லை. மாறாக அவன்மேல் அன்பே கொள்கின்றனர்.

'வாளால் அறுத்துச் சுடினும் மருத் துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல்'

என்பது ஆழ்வார் பாடல்.

மருத்துவனைப் போலவே இறைவனும் உயிர்களிடத்துள்ள மலமாசைத் துடைக்கக் கருதுகின்ருன். அவ்வாறு அவர்களின் மாசைத் துடைக்க மருத்துவன் கையாளுகின்ற முறைகள் போல இறைவனும் பலவித விளையாடல்களை மேற்கொண்டே அருள்கின்ருன். ஆட்கொண்டு அருளுகையில், இன்னின்னுரை இன்ன முறையில், படிமுறையில் (சோபான நெறி) ஆளவேண்டும் என்றெண்ணி அவ்வாற்ருன் இன்ப, துன்பம் அருத்தி வினையறுத்து ஆட்கொள்வான். அவர்களின் வினைச்சுமைகளுக் கேற்ற வகையில் அவற்றைத் துடைக்கும் வகையில் செயல்களைச் செய்து ஆட்கொள்வான். உயிர்களின் மலமாசினைத் துடைக்கவேண்டும். அதன்பின் பேரா இயற்கை பெற வேண்டும் எனும் எண்ணம் அடிப்படை. அதன்மேல் செய்யும் செயல்களும் அதனைக் கருத்தில் கொண்டே செய்யப்படுகின்றது. எனவே அவனின் செயலை மட்டுமே பார்த்து அவன் திருவுளத்தில் முகிழ்க்கும் அன்பின் ஊற்றை உணாரதார் இல்லை. மருத்துவனிடம்போலவே 'தங்கள் மலங் கழுவும்' இறைவனிடம் முன்னைக்குமேலும் அன்புடையராகவே திகழ்வர்.

குடும்ப வாழ்க்கையில் பெற்ற பிள்ளைகள் 'பண்புடை நன்மக்கள் ஆக இருந்து விடின் தொல்லையில்லை. அவரை நெறிப்படுத்த அவசியமில்லை. அவரே தமக்கேற்ற நெறியில் ஒழுகி வாழ்வர் அவ்வாறன்றி மாறி அமைந்து விட்டால் என்ன செய்வது? சான்ருேர் மொழிந்த அறவுரைகளைச்சொல்லி நன்னெறிப் படுத்த வேண்டும். அவ்வாறும் திருந்தவில்லையாயின் அடித்து நொறுக்கி நல்வழியில் நடக்கச் செய்ய வேண்டும். சொற்படி நடக்காத குழந்தைகளைப் பெற்ருேர் திட்டியும் அடித்தும் முறைப் படுத்துகின்றதை அன்ருடம் காண்கிருேம், அவர்களின் எண்ணம் குழந்தைகளை அடிப்பதும் அதில் தாம் இன்பம் காணுவதுமாக இருப்பின் அது முற்றிலும் தவருனது; ஆனல் அவர்கள் நமது குழந்தை தியவழியில் செல்லுகின்றதே; அது சொல்ல முடியாத துன்பங்களை விளைவிக்குமே? அதனல் வருந்தும்போது யாரும் துணை செய்ய முடியாதே! என்றெல்லாம் மனம் புழுங்குவர். முதலில் சாம, பேத, தான நடவடிக்கைகளை மேற் கொள்வர் அவற்ருல் பயனில்லாமல் போகும் நிலையில் 'தண்டோபாயம்' நடக்கும். அப்படியாவது குழந்தைகள் திருந்தி நல்வழிப்பட வேண்டும் என்பதே அவர்களின் உள்மன வேட்கையாகும் ஆனல் வெளியில் தெரிவதோ கடுமையான புறச் செயலாகும், எனவே வெளிப்படையாகத் தெரிகின்ற|செயல்களை

மட்டும் கண்டு, அவை கொடுஞ் செயல்கள் என்று முடிவுசெய்து விடக் கூடாது. அச்செயல்களின் அடிப்படையில், ஆழ்மனத்தில் அடைந்து கிடக்கும் அன்பின் பெருக்கை உணர வேண்டும்.

அப்படிப்பட்டதே இறைவனின் நிக்கிரகத் தொழிலும், நன்ருற்றல் செய்து நல்வழிப்படுவாரை அவன் எந்தவிததுன்பத்துக்கும் ஆட்படுத்துவதில்லை. தீநெறிப்பட்டு தீச்செயல் புரிந்தாரை அவர் வினைக்கேற்றபடி தண்டித்து, அதனுல் அவரிடத்து இருந்த மாசை-மலத்தைத்-தூய்மைப் படுத்தி அவரை நல்லவர் ஆக்குகின்ருன். எனவே அதற்கும் அடிப்படை அன்பே. இறைவனின் முனிவு இவ்வுலக உயிர்களிடத்துக் கொண்ட அன்பாலேயே ஏற்படுவது என்பர் அருளாளர்கள்.

'தந்தைதாய் பெற்றதத்தம் புதல்வர்க டஞ்சொ லாற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினலடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனர் முனிவு மென்றும்.

# இதமான வாழ்வுக்கு எளியவழிகள்

### பல்வலிக்கு

1. பல்வலி ஏற்பட்டால் மூக்குதிச் செடியின் பச்சிலையை சாறு பிழிந்து போட குணமாகும்.

### வலிப்பு, மூளைக் கோளாறு

2. சீமை அமுக்கார கிழங்கை நன்ருகக் காய வைத்து இடித்துச் சலித்துப் பவுடராக்கித் தினம் ஒருஸ்பூன் பாலில்கலந்து சாப்பிடக் குணமாகும்.

### நாட்பட்ட இருமலுக்கு

3. காட்டுவெங்காயத்தைச் சாறுஎடுத்துப் போதியசர்க்கரை சேர்த்து, ஒரு ஸ்பூன், காலை, மாலை அருந்த நாட்பட்ட இருமல் குணமாகும்.

Dr. N. சடையப்பன், S.M.P.

# சிவப்பிரகாசம்

தெளிவுரை

கு. சுந்தரமூர்த்தி M. A., திருப்பனந்தாள்.

### உயிர் உணருமாறும் நுகருமாறும்

67. அறிந்திடும் அனுதி வாயில் ஆனவை அவன்த னாலே
அறிந்திடும் என்றும்ஒன்றும் அறிந்திடா அவைபோல் யாவும்
அறிந்திடும் அறியுந் தன்மை அறிந்திடா கன்மத் தொன்மை
அறிந்துஅவை நுகரு மாறும் அருளுவன் அமலன் தானே.

(தெ - ரை) பொருள்களை அறிகின்ற மனம் முதலிய அகக் கருவிகளும், அறிபொறிகள் முதலாயினவும் உயிரது துணையாலேயே பொருள்களை அறியும். ஆயினும் அவை உயிரால் அறிகின்றோம் என்பதை அறியமாட்டா. அக்கருவிகளைப் போலவே உயிரும் இறைவனால் எவற்றையும் அறிந்திடும். ஆயினும் இறைவன் அறிவிக்க அறிகின்றோம் என்னும் தன்மையை உயிர்கள் அறியமாட்டா. வினையின் நீங்கி விளங்கிய அறிவினனாய் விளங்கும் இறைவனே உயிர்செய்த பழவினைக்கீடாக நுகர் வினையைக் கூட்டி அருளுவன்.

மனம் + ஆதி = மனுதி: மனம் முதலிய கருவிகள். அவன் தனாலே – உயிராலே. கன்மத்தொன்மை – முன்செய்த வினைப்பகுதி. உயிரான் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் துய்த்தனவும், பிறந்த உடம்பால் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் துய்க்கக் கடவனவாய்க் கிடந்தன.

'விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தறிந்து அறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே.

என்னும் சிவஞானபோத நூற்பாவும்,

பாசம் சடம்உயிரோ தானுகப் பற்றறியா
ஈசன் இரண்டும் இணைத்தாட்டிப் - பூசலென்றுஞ்
செய்பவனே தானே திரும்பியருள் செய்யாமல்
உய்பவர்கள் உண்டோ உரை.

என்னும் சிவபோகசாரமும் ஈண்டு எண்ணற்குரியன.

68. காட்டிடும் கரணம் ஒன்றும் இல்லையேல் காணொ ணாதாம்
நாட்டிய இவற்றால் ஞானம் நணுகவும் ஒண்ணா முன்னம்
ஈட்டிய தவத்தினாலே இறையருள் உருவாய் வந்து
கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே.

(தெ - ரை) விளக்கம்பெற உதவும் அறிகருவிகள் முதலிய கருவிகள், ஒன்றும் இலதாயின் உயிரால் ஒன்றையும் அறியவொண்ணா தாம். ஆனால் இங்குக் குறித்த இக்கருவிகளால் மெய்யுணர்வை அடையவும் இயலாது. முற்பிறவிகளில் செய்த புற அக ஒன்றிய வழி பாடுகளாய தவத்தின் பயனால் இருவினையொப்பும் அருட்பதிவும் வர அதுகாறும் உள்நின்று உணர்த்திய இறைவன், அருள் உருக் கொண்டு குருமூர்த்தியாய் எழுந்தருளிவந்து தமது தீக்கையால் இக்கருவிகளின் கூட்டைக் கழற்றித் தமது திருவடியை அடையுமாறு ஞானத்தை வழங்கியருளுவன்.

கருவிகள் வழி வரும் அறிவு ஒருவழிப்பெறும் அறிவே (ஏகதேச அறிவு) யன்றி முழுமையான அறிவு ஆகாது; நிலையுடையதும் ஆகாது. இறையருள் வழிப்பெறும் அறிவே முற்றுணர்வை அருளுவ தாகும்; நிலையாயதும் ஆகும். இதுவே பதிஞானம் எனப்படும். குரை கழல் - சிலம்பு ஒலிக்கின்ற திருவடி. அடியவர்க்குப் பாதச் சிலம் பொலி காட்டும் பண்பு குறித்தது. 'வாதவூரினில் வந்தினி தருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' என்னும் திருவாசகமும்.

## ஞானத்தின் இயல்பு

69. பல்நிறம் கவரும் தொன்மைப் படிகம்நீ(டு) ஒளியும் பன்மை
மன்இலங்கு இயல்புந் தந்த வளர்ஒளி போல வையம்
தன்அகம் பயிலும் நற்சித் சடங்களின் தன்மை தாவா
நல்நலம் பெற நிறைந்த ஞானமே ஞானம் என்பர்.

(தெ - ரை) பல நிறங்களையும் தன்னிறமாகக் கவருகின்ற பழைய பளிங்குக்கு மிகு ஒளியையும், பலநிறங்களும் பொருந்தி விளங்கும் தன்மையையும் கொடுத்த கதிரவனின் ஒளி போல, இவ் வுலகிடத்துப் பொருந்திச் செயற்படும் நல்லறிவுடையதும், அறிவற்ற துமாய பொருள்களின் தன்மைகளைத் தான்பொருந்தாது, உயிர்கள்

அனைத்தும் நற்பயன்களைப் பெறுமாறு யாண்டும் நீக்கமற நிறைந் திருக்கும் சிவஞானமே மெய்ஞ்ஞானம் என்பர் பெரியோர்.

கதிரவன் கீழ்த்திசையின் கண்ணும் மேல்திசையின் கண்ணும் சார்ந்து நிற்கும் பொழுது, அதன் ஒளி பளிங்குக் கல்லில் பட அது பொழுது அதனையடுத்த பொருள்களின் நிறங்களையே காட்டி நிற்கும். அக் கதிரவன் நேராக உச்சியில் இருக்கும் பொழுது அதனது ஒளியில் பொருந்தி நிற்கும் பளிங்குக்கல், தன ஒளியை மட்டுமே மிகுதியாகக் காட்டி நிற்கும். இவ்வாறு அப்படிகம் பிற ஒளியையும் தன்னொளியையும் பெற்று நிற்கும் பொழுது அவ் விருவகை ஒளியை யும் பெறுதற்கு ஏதுவாகிய கதிரவன் அவ் வொளிகளைப் பெறுவதில்லை. அதைப் போன்றே உயிர், கருவிகளின் கூட்டுறவால் அறிவைப் பெறும் பொழுதும் அக் கூட்டின்றித் தன்னிலையில் அறிவு விளக்கம் பெறும் பொழுதும் அவ்விரண்டிற்கும் ஏதுவாக நிற்கும் திருவருள் விளக்கம் மாறுபடுவதில்லை; எஞ்ஞான்றும் ஒரு தன்மைத்தாயே விளங்கி நிற்கும். சித்து - அறிவுடையது. திருவருள் விளக்கம் பெறுதற்கு ஏதுவாயது பற்றி 'நற்சித்து' என்றார்.

18666

இதுவுமது

70. மாயைமா மாயை மாயா வரும்இரு வினையின் வாய்மை
ஆயஆர் உயிரின் மேவும் மருளினால் இருளாய் நிற்கும்
மாயைமா மாயை மாயா வரும்இரு வினையின் தூய்மை
ஆயஆர் உயிரின் மேவும் அருளினால் ஒளியாய் நிற்கும்.

(தெ-ரை) தூயதல்லாத மாயையும், தூமாயையும், ஒழியாது வரும் நல்வினை தீவினைகளுமாகிய இவற்றின் வயப்பட்டு நின்று நுகருங்கால், அவ்வாறு நுகரும் அரிய உயிரிடத்துப் பொருந்தும் மயக்கநிலையில் மேற்கூறிய ஞானம் வெளிப்படலின்றி மறைந்து நிற்கும். மேற்கூறிய இரு மாயைகளும் இருவினைகளுமாய இவற்றின் தன்மையை அறிந்து அவற்றின் நீங்கி நிற்கும் அரிய உயிரிடத்துப் பொருந்திய அருள்நிலையில் அச் சிறப்புடைய மெய்ஞ்ஞானம் வெளிப்பட்டு விளங்கி நிற்கும்.

பொருளல்லவற்றைப் பொருளென்று கருதி நிற்கும் மருள் நிலையில் ஞானம் மறைந்தே நிற்கும். சார்புணர்ந்து சார்புகெட நிற்கும் அருள் நிலையில் ஞானம் வெளிப்பட்டு நிற்கும் என்பது

கருத்து: மாமாயை - தூமாயை. இதனை இவ்வாறு கூறவே முன்னைய மாயை தூயதல்லாத மாயை என்பது பெறுகின்றது. துய்த்துத் தொலைப்பினன்றி நீங்காவாதலின் 'மாயா வரும் இருவினை' என்றார். மெய்ப்பொருள் பொய்ப்பொருள் ஆகிய இரண்டனையும் அறிதற்குரிய உரிமையுமைமை பற்றி 'ஆருயிர்' என்றார். 'இரு திறன் அ இரண்டலா ஆன்மா'' என்ற திருவாக்கும் காண்க.

### ஞானத்தின் பயன்

71. தேசுற மருவும் ஆன்ம தெரிசனம் ஆன்ம சுத்தி
ஆசு இலா ஆன்மலாபம் ஆக மூன்றாகும் மூன்றும்
பாசம் அது அகல ஞானம் பற்றல்தான் பணியை நீத்தல்
ஏசில் நேயந்து அழுந்தல் எனும் இவற்றுஅடங்கும் அன்றே.

(தெ-ரை) ஞானத்தை அடைதலால் வரும்பயன் உயிர்க்காட்சி, உயிர்த்தூய்மை, குற்றத்தின் நீங்கிய உயிர்ப் பேறு என மூன்றும். இம் மூன்றும் பாசமானது நீங்க ஞானத்தைப் பற்றுதல், தன் செயல் அறுதல், குற்றமற்ற சிவத்தில் அழுந்துதல் என வரும் மூன்றனுள்ளும் முறையே அடங்கும்.

உயிர் ஞானத்தைப் பெறுதலால் அது படிப்படியாக உயரும். அவ்வாறான உயர்நிலையைப் பத்தாகப் பாகுபடுத்தி உரைப்பர். அவை தத்துவ வடிவு, தத்துவக்காட்சி, தத்துவத்தூய்மை, உயிர் வடிவு, உயிர்க்காட்சி, உயிர்த்தூய்மை, சிவவடிவு, சிவக்காட்சி, சிவப்பற்று, சிவப்பயன் என்பனவாம். இவற்றுள் உயிர்க்காட்சி முதலாக உள்ள மூன்றன் பயனும் ஞானத்தின் பயனும் என இப்பாடல் கூறுகின்றது. தேசு - ஒளி : ஈண்டு அருளைக் குறித்தது. உற - அடைதலால். மருவும் - பொருந்தும் பயன். ஏசில - குற்றமற்ற.

### உயிர்க்காட்சி

72. தன்அறி வதனால் ஏதும் தனக்குஅறிவு இல்லை யேனும்
தன்னறி வாக எல்லாம் தனித்தனிப் பயன் அருந்தும்
தன்னறிவு அறியும் தன்மை தன்னாலே தனைய றிந்தால்
தன்னையுந் தானே காணும் தான்அது வாகி நின்றே.

(தெ-ரை) உயிர் தன்னுடைய இயற்கை அறிவால் எதனையும் அறியும் இயல்புடையது அன்று. எனினும் எதனையும் தன்னுடைய

அறிவினாலேயே அறிந்து துய்ப்பதாகக் கருதி கருவிகள் வழிவரும் நுகர்வுகள் அனைத்தையும் ஒவ்வொன்றாகத் துய்த்து நிற்கும். திருவருள் ஞானத்தால் தன்னை அறிய முற்படின் தான்பெறும் அறிவெல்லாம் கருவிகள் வழிப் பெற்றது என்றும், அதற்குக் காரணமாய் நின்றது திருவருள் என்றும் அறியும். அவ்வாறு காணின் உயிராகிய தனது இயல்பையும் தான் சார்ந்து நிற்கும் திருவருளையும் அறியும்; இதுவே உயிர்க் காட்சியாகும்.

உயிர் தன்னைத்தான் அறியாது தான் நுகரும்பொருள் ஒவ்வொன்றிலும் பற்று வைத்துத் துய்த்திருக்கும் நிலை கட்டு நிலையதாம். திருவருள் வயப்பட்டு அவ்வருள் வழி உணரும் நிலை வாய்த்தபொழுது தன்னியல்பையும், தனக்குச் சிவபரம்பொருள் உதவிவரும் நிலையையும் முற்ற அறியும். தன்னாலே தனையறிந்தால் என்பது அவனருளாலே அவன் தாள் வணங்கி என்பதாம். தான் அதுவாகி நின்று—உயிர் திருவருள் வயப்பட்டு நின்று: அவ்வாறு நிற்றலாவது தன் செயலற நிற்பதாம்.

## உயிர்த் தூய்மை

73. தத்துவ மான வற்றின் தன்மைகள் உணருங் காலை
உய்த்து அறிந்திட உய்ப்பது ஒளிவளர் ஞானம் ஆகும்
அத்தன்மை அறியு மாறும் அகன்றிட அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம் சுத்த ஞானத்து ஒருமுதல் தோன்றும் அன்றே.

(தெ-ரை) தத்துவங்களின் இயல்பை ஆராய்ந்து அறியும் பொழுது அவை தன்னின் வேறாய அறிவற்ற பொருள் எனக் கூர்த்த அறிவில் தோன்றுமாறு செய்வது ஒளிமிக்க சிவஞானம் ஆகும். அவ்வாறு அறிகின்ற குறித்து உணரும் அறிவும் நீங்க அச்சிவஞானமே தானாய் நிற்க அது தூய்மை அடையும். அவ்வாறு விளக்கம் தரும் தூய ஞானத்தில் ஒப்பற்ற முதல்வனுடைய காட்சியும் அப்பொழுது தோன்றும்.

தூய சிவஞானத்தால், நில்லாத பொருளை நிலையென்று உணரும் புல்லறிவு போம். அவ்வாறு கழித்துணர நிற்கும் உயிரறிவின் முனைப்பும் நீங்க அவ்வருள் விளக்கத்தின் வயமாய் நிற்க, உயிர் தூய்மை அடையும். அதுபொழுது அவ்வருள் விளக்கத்தின் முதல்வனாகிய இறைவனும் தோன்றி அருளுவன். இந்நிலையில் விளக்கம் பெற்றிருப்பதுவே உயிர்த்தூய்மை யாகும். உயிரின் அறிவு இச்சை செயல்கள் செயற்படாது நின்றவிடத்தில் அவ்வுயிரொடு கூடிய அருள் சுத்த ஞானம் எனப்படும். பரை, சத்தி என்பதும் இதுவாம். ஞானத்து ஒருமுதல்—ஞானத்திற்குக் காரணமாய சிவபரம்பொருள், ஞானமும்

சிவபரம்பொருளும் சத்தியும் சிவமும் எனப்படும். ஒருமுதல் தோன்றும் என்பது சிவக்காட்சியாகும். இதனைப்,

பரைஉயிரில் யான்என்துஒன்று அறநின்றது அடியாம்
பார்ப்பிடம்எங் கும்சிவமாய்த் தோன்றல் அது முகமாம்
உரையிறந்த சுகம் அதுவே முடியாகும் என்று அங்கு
உண்மையினை மிகத்தெளிந்துபொருள்வேறு ஒன்றுஇன்றித்
தரைமுதலில் போகாது நிலையினில்நில் லாது
தற்பரையில் நின்றழுந்தாது அற்புதத்தின் ஆகும்
தெரிவரிய பரமானந் தத்தில் சேர்தல்
சிவன்உண்மைத் தெரிசனமாய்ச் செப்பும் நூலே

எனவரும் உண்மைநெறி விளக்கத்தால் உணரலாம்.

ஞான முதல்வன்

74, உறைதரும் உணர்வும் அன்றி அதன்முதல் உள்ள தென்று இங்கு
அறைவதுஎன் என்னில் அண்ணல் அருளெனும் அதுவேயன்றி
நிறையொளி முதலது அன்றி நின்றிடா நிமல னாகும்
இறையவன் முதல் அவன்தன் இலங்குஅருள் சத்தி யாகும்.

(தெ-ரை) உயிரொடு பொருந்தியிருக்கும் அருள் விளக்கம் என்பது ஒன்றன்றி அதற்கு முதலாய முதல்வனும்உண்டென்று இவ்விடத்துச்சொல்லுவதுஎன்னை? என வினவின், அத்தகைய அருள் விளக்கமே இறைவனின் அருள் என்று சொல்லப்படும். அன்றியும் யாண்டும் நிறைந்து நிற்கும் அவ்வருள் ஒளியானது, அதன் முதலாகிய இறைவனை விடுத்து நிற்கமாட்டாது. இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய இறைவன் முதல்வனுவான். அவனிடத்து விளங்கும் அருள்; சத்தியாகும்,

உறைதரும் -(உயிருடன்) பொருந்தி நிற்கும்; உணர்வு—ஞானம் இறையருள்.

அருள் சிவத்தைக் காட்டிநிற்கும்

75. சுத்தமாம் சத்தி ஞானச் சுடராகும் சிவம் ஒழிந்துஅச்
சத்திதான் இண்டும் முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
அத்தனை அருளும் எங்கும் அடைந்திடும் இருளகற்றி
வைத்திடும் இரவி காட்டும் வளரொளி போல்ம கிழ்ந்தே.

(தெ-ரை) தூயதாய அருளாற்றல் ஞானப் பேரொளியாய் நிற்கும்: அப்பேரொளிதானும் சிவபரம்பொருளை விடுத்துத் தனி ஒரு முதலாய் நிற்க மாட்டாது. எங்கும் நிறைந்திருக்கும் இருளை நீக்கி நிற்கும் கதிரவனைக் காட்டும் அதன் ஒளியைப் போல, அவ்வருளாற்றலும், உயிரைப் பண்டிருந்தே தகைத்து நிற்கும் இழிந்த மும்மலங்களையும் போக்கி அவ்வுயிர்க்குக் கருணையுடன் காட்டிநிற்கும்.

சுத்தமாம் சத்தி - இயல்பாகவே மலங்களின் நீங்கிய தூய அருள். இரவி – கதிரவன்.

சிவசமவாதியின் கொள்கையும் மறுப்பும்

76. புகல்அரும் அசத்தர் தம்பால் பொருந்திய அலகை யேபோல்
அகிலமும் உணரும் ஈசன் அருளுயிர் மேவ லாலே
சகலமும் நிகழ வேண்டும் தலைவனைத் தொழிலும் தானே
இகல்அற இயற்றல் வேண்டும் என்றது நன்றியின்றே

(தெ - ரை) சொல்லுதற்கரிய வலியில்லாதவரிடத்தே பொருந்திய பேயின் குணம்செயல்கலெல்லாம் அவரிடத்து நிகழ்வது போல, அனைத்தையும் உணரும் சிவபரம்பொருளின் அருள், உயிரிடத்துப் பொருந்துதலால் அச்சிவபரப்பொருளுக்குரிய அனைத்துக் குணங்களும் அவ்வுயிரிடத்தில் நிகழவேண்டும். அன்றியும் அம்முதல்வன் செய்யும் ஐந்தொழில்களையும் உயிரும் மாற்றமின்றிச் செய்தல் வேண்டும் என்று கூறுவது நலந்தரக் கூறியதன்று.

அசத்தர் - வலியில்லாதோர். அலகை – பேய். பேய் பிடித்தவனிடத்தில் பேயின் குணமும் செயலும் தோன்றும். அதுபோல, சிவபரம் பொருளின் அருளைப் பெற்ற உயிர்களிடத்தும் அச்சிவ பரம்பொருளின் முற்றறிவு முதலிய குணங்களும், ஐந்தொழில்களும் உண்டாகும் என்பர் சிவசமவாதிகள். இக்கருத்துப்பொருந்தாமையை அடுத்த பாடலால் விளக்குவர். நன்றி – நன்மை.

சிவசமவாதிகளின் கருத்துக்கு மறுப்பு.

77. இன்றுநோக்கு உரை நடக்கும் இயல்பு இலோற்கு இனைய வாய்ந்து
நின்றதோர் அலகை சேர்ந்தால் நிகழ்வதென் அதுபோல் உள்ளத்து
ஒன்றிய உணர்வு தம்பால் உள்ளது நிகழ்த்தும் ஈசன்
தன்தொழில் நடாத்தும் மேனி தனக்கெனக் கொண்டு தானே.

(தெ - ரை) இதுபொழுது பார்க்கவும்ம் பேசவு நடக்கவும் இயல்பில்லாத ஒருவரிடத்து இம் மூன்றுனும் குறைவறப் பொருந்தி நிற்கும் ஒரு பேய் பிடித்தால் அவனிடத்தில் உண்டாவது என்ன வாய் இருக்கும்? பார்க்கவும் பேசவும் நடக்சவும் அவ்வுயிர்க்கு உளவாமோ? உளவாகா. அதுபோல உயிரிடத்துப் பொருந்திய அருளும், அவ்வுயிரிடத்தில் உள்ளதையே விளக்கி நிற்கும். சிவபரம் பொருள் தமக்கென ஒரு திருவுருவைத் தாமே தாங்கிக் கொண்டு ஐந்தொழில்களேயும் செய்தருளும்.

உள்ளம் - உயிர்; ஒன்றிய உணர்வு - உயிர்க்குயிராய் விளங்கும் திருவருள். பேய் தான் கொண்டவனது குணம் செயல்களுக்கு ஏற்பவே அவனே ஆட்டி வைக்கும். அதுபோல இறையருளும் உயிரிடத்து உளவாய அறிவு இச்சை செயல்களேயே விளக்கி நிற்கும். உயிர் உய்தற்குரிய படைப்பு முதலிய ஐந்தொழில்சளேயும் இறைவன் தனக்கெனத் திருவுருக் கொண்டு செய்தருளுவன். அவற்றை உயிர் செய்யாது என்பதாம்.

### உயிர்த் தூய்மையின் பயன்

78. இந்நிலே தன்னின் மன்னி எய்திடும் கலாதி போதம்
தன்அளவு அறிந்து நிற்கும் தகவுஇலா மலங்கள்நீத்த
அந்நிலே கரணம் ஆகா வகைஅதில் அறிவு அடங்கி
மன்னிட வியாபி யாய வான்பயன் தோன்று மன்றே.

(தெ - ரை) மாயையின் விளேவாய தத்துவக்கூட்டால் கட்டுண்டு நிற்கும் நிலேயில், உயிரோடுகூடித் தொழிற்படும் கலே முதலிய தத்துவங்களால் வரும் ஒருவழி உணரும் அறிவியல்பை உணர்ந்து, அதற்கு ஏதுவாக நிற்கும் இழிந்த மலங்களே நீக்கிய அருள் நிலேயில், அக் கருவிகளின் வழிவரும் துன்பம் தாக்காதவாறு, அவ்வருளில் அழுந்தி நிற்க, உயிர்க்கு அனேத்தையும் உணரும் விரிந்த அறிவாகிய பயன் கிட்டும்.

கலே முதலிய தத்துவக் கூட்டு உள்வழி உயிர் ஒருவழி உணர்வதாய சுட்டறிவையே பெற்றிருக்கும். மலங்களால் புடைப்புண்ணவும் படும், திருவருள் விளக்கத்தால் தத்துவக் கூட்டு சழல சிவபரம் பொருளில் அழுந்தி நிற்கும் நிலேயில், சுட்டறிவு நீங்கிப் பேரறிவு பெறும். மும்மலத் துன்பமும் நீங்கும் என்பது கருத்து - எனவே பாச

நீக்கமும் பரந்த அறிவும் உயிர்த்தூய்மையின் பயனுயின. செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டாது தகைக்கும் இழிவுடைமை பற்றித் 'தக விலா மலங்கள்' என்ருர். கரணம் ஆகாவகை—மலத்துன்பம் தாக்கா தவாறு. அறிவு—உயிர். அடங்கி மன்னிட—அருளில் அழுந்தி நிலைபெற. ஏகன் ஆகி இறை பணி நிற்க மும்மலத் துன்பமும் போம் என்பது கருத்து. ஏகனுகி நிற்றலால் யான் எனதென்னும் செருக்கற்று உயிர் தன்முனைப்பு அறும். இறைபணி நிற்றலால் மாயை கன்மங்களின் துன்பம் வாதியாது. பாசநீக்கத்தின் மேலாகப் பரந்த அறிவாம் பய னும் பெறுதலின் 'வான் பயன் தோன்றும்' என்ருர்.

## ஐக்கியவாத மறுப்பு

79. அடைபவர் சிவமே ஆகும் அதுவன்றித் தோன்றும் என்ற
கடனதுஏது என்னில் முன்னம் கண்டிடார் தம்மைப் பின்னும்
தொடர்வுஅரும் அருளினுலும் தோன்றுமா காணு ராயின்
உடையவன் அடிசேர் ஞானம் உணர்தல்இன்று அணைதல்
இன்றே.

(தெ—ரை) திருவருளைப் பெற்றவர் சிவமாதலன்றி அவ்விடத்து மற்றும் ஒரு பயன் தோன்றும் என்ற முறைமை என்னை? என்னில், கட்டுநிலையில் உயிர்கள் மல மறைப்பினுல் தமது விரிந்த அறிவைப் பெருது இருந்தன. அந்நிலை நீங்கத் தூயநிலையிலும் எய்தற்கரிய திருவருள் துணையால் தமது விரிந்த அறிவை விளங்கக் காணு வாயின் இறைவனது திருவடியாகிய சிவப்பேற்றைப் பெறுதற்கு ஏதுவாய சிவஞானத்தை அறிதலும் இல்லை, திருவடியை அணை தலும் இல்லை என முடியும்.

வீடு பேற்றில் உயிர் சிவமேயாகி விடும் என்ற ஐக்கிய வாதிகளை மறுக்குமுகமாக இப்பாடல் அமைந்துள்ளது. உயிரது சுட்டுணர்வு நீங்கி விரிந்த அறிவு பெறுதலும், திருவடி இன்பத்தில் திளைத்தலும் வீடுபேற்றின் பயனும். உயிர் இறைவன் வழங்கி யருளும் அப்பேற்றைத் துய்த்தற்குரியதேயன்றி இறைவனே யாதல் இல்லையென்பது அறியத்தக்கதாம். கடன் - முறைமை.

## நனவு நிலையில் மேல்நிலை

80. பொற்புஉறு கருவி யாவும் புணராமே அறிவி லாமைச்
சொற்பெறும் அதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்ற
சிற்பரம் அதனுல் உள்ளச் செயல்அறுத் திடவு திக்கும்
தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதம் தானே.

(தெ-ரை) பொலிவுமிகும் கருவிகளோடு கூடி (சகலநிலை) வேறுபடாமலும், அறிவின்றி இருக்கும் எனக் கூறப்பெறுதற்குரிய ஆணவக்கட்டொடு தன்நிலையில் (கேவலநிலை) கூடாமலும் தன்பால் தோன்றிநின்ற மேலாய அறிவாற்றலின் அருளால் தன்முனைப்பு ஒழிய, அதுபொழுது தோன்றும் சிவபரம் பொருளொடு ஒருமையுற நிற்றல் நனவில் மேல்நிலை (சாக்கிராதீதம்) எனப்படும்.

வினைப்பயனைத் துய்த்தற்குத் துணைசெய்தலின் 'பொற்புறு கருவி' என்றார். அவை முப்பத்தாறும். அதீதம் - தன்நிலை (கேவல நிலை). இந்நிலையில் ஆணவத்தோடு ஒன்றியிருத்தலின் உயிர் அறிவின்றி இருக்கும். ஆதலின் 'அறிவிலாமைச் சொற்பெறும் அதீதம்' என்றார். சிற்பரம் - தனக்கு மேலாய அறிவாற்றல். உள்ளச்செயல்- உயிரது முனைப்பு நிலை. தற்பரம் - தனக்கு மேலாய பொருள்; சிவ பரம்பொருள். தனக்கு - உயிர்க்கு.

### கருவிகளை ஒடுக்குதற்குரிய வழி

81. ஒடுங்கிடா கரணம் தானே ஒடுங்குமாறு உணர்ந்து ஒடுக்க
ஒடுங்கிடும் என்னில் நின்றது ஒடுங்கிடா கரணம் எல்லாம்
ஒடுக்கிட ஒடுங்க உள்ள உணர்வுதான் ஒழியும் வேறாய்
ஒடுங்கிடின் அன்றி மற்ற உண்மையை உணரொ ணாதே.

(தெ-ரை) உயிர்களைச் சார்ந்து நிற்கும் கருவிகள் தாமாக ஒடுங்கமாட்டா. அவற்றை உயிரது அறிவால் ஒடுங்கும் வழியை அறிந்து ஒடுக்க ஒடுங்கும் என்று கூறின் அக் கருவிகளை அடக்கிய உயிரறிவு ஒடுங்காது நிலைபெற்றிருக்கும். கருவிகள் ஒடுங்க ஒடுங்க உயிரறிவும் ஒடுங்குமெனில் அதுபொழுது உயிர்க்குளதாகிய அறிவும் கெட்டு ஆணவத்தால் மயங்கிநிற்கும் (கேவலம்) நிலை ஏற்படும். ஆதலின் அக் கருவிகளை உயிரின் வேறாகக் கண்டு திருவருளில் ஒடுங்கினாலன்றி அச்சிவபரம்பொருளை அறிந்து அனுபவிக்க இயலாதாம்.

கருவிகள் எனப் பொதுப்படக் கூறினும் ஈண்டு அகக்கருவிகளைக் கொள்க. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவாம். இவ்வகக் கருவிகளும் உயிரும், அமைச்சும் அரசும் ஒப்பத் தொழிற் படுவனவாம். இவ்வகக் கருவிகளைத் தன்முனைப்பாலன்றித் திருவருள் வலியாலேயே அடக்கமுடியும் என்பது இதன் கருத்தாம். 'பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவது உனக்கருமையோ' என்றல் தொடக்கத்ததாய திருவாக்கும் காண்க.

உயிரறிவு கெடற்குரிய வழி

82. பற்றிடும் கருவி யாவும் படர்ந்துஉணர்வு அளிக்குங் காலை
உற்றுஅறிந் திடுவது ஒன்றின் உணர்வினின் உண்மையாகும்
மற்றது பகல் விளக்கின் மாய்ந்திட வருவ துண்டேல்
பெற்றிடும் அதனை மாயப் பிறப்பினை அறுக்க லாமே.

(தெ - ரை) உயிரைப் பற்றி நிற்கும் அறிகருவிகள் யாவும் புறத்துச் சென்று உயிர்க்கு அறிவைக் கொடுக்கும் அமையத்து, அவ்வப் பொருள்களிலும் ஒன்றைப் பொருந்தி நின்று அதனையே குறித்துணர்தல் உயிரறிவின் இயல்பாம். அவ்வுயிரறிவு பகற்பொழுதில் எரியும் விளக்குப்போல அடங்கி நிற்கும் பேரறிவு வாய்க்குமாயின், அப்பொழுது சிவபரம்பொருளை அடையும்; மயக்கம் தரும் பிறவினையையும் அறுக்கலாகும்.

படர்ந்து உணர்தல் - புறப்பொருள்களைப் பற்றியறிதல். ஈண்டுக் கருவி என்பது அறிகருவிகளைக் குறிக்கும். அவை மெய் வாய் கண் மூக்கு செவி என்பனவாம். உணர்வினின்—உயிரது அறிவின். வெயிலிடை நிற்கும் விளக்குத் தான் கெடாது தன்ஒளி மட்டும் கெட்டு நிற்கும். அதைப் போன்றே திருவருள் வயப்பட்ட உயிர் தான் கெடாது தன் உணர்வு மட்டும் கெட்டு நிற்கும். அந்நிலை வாய்ப்பது அரிதாதலின் 'வருவதுண்டேல்' என்றார்.

'வான்கெட்டு மாருதம் மாய்ந்துஅழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ,

என்னும் திருப்பாடல் ஈண்டு எண்ணுதற்குரியது.

உயிரது பேறு

83. முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அது தானாக
வந்தவாறு எய்த நிட்டை மருவுதல் என்று நான்காம்
இந்தவாறு அடைந்தோர் முத்தி எய்திய இயல்பினோரே.

(தெ-ரை) முற்பிறப்பில் செய்த புற அக ஒன்றிய வழிபாடுகளாய பெருந்தவத்தின் திரண்ட பயனால், இறைவனே அருள்உருத்தாங்கி ஆசிரியனாய் அருளுரை வழங்குவன். அவ் வருளுரைகளைக் கேட்டலும் கேட்டவற்றை ஒருமுகமாக எண்ணுதலும், அதன் பயனாக உண்மை தெளிதலும், தெளிந்ததன் பயனாக மெய்ப்பொருளாய சிவம் தான்

ஆகஒன்றியவாறு அதனெடு பொருந்தலும் எனமெய்யுணர்வுகைவரப் பெறும் நிலை நான்கு வகைப்படும். இம்முறையில் நின்று உயர்ந்தோர், வீடுபேறு அடைதற்குரியராவர்.

புற(சரியை), அக(கிரியை), ஒன்றிய(யோகம்) வழிபாடுகள் குரு வருள் பெறுதற்கு ஏதுவாகும். 'தவத்தினில் உணர்த்த' எனவரும் சிவஞான போதம் இதனைச் சுருங்க நுவலும் கருத்துடையதாம்; அது தாளுக-ஏகனுக என்னும் குறிப்பினது.

### ஞான நிட்டை

84. பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை அறிய ஒண்ணுது இறைஅருள் ஞானம் நண்ணித்
தேசுஉறும் அதனுன் முன்னைச் சிற்றறிவு ஒழிந்து சேர்ந்து
நேசமோடு உயர் பரத்து நிற்பது ஞான நிட்டை.

(தெ-ரை) கருவிகள் வழி வரும் விரிந்த உலகறிவாகிய பாச ஞானத்தாலும், நானே பிரமம் என்னும் பசு ஞானத்தாலும் சிவபரம் பொருளை அறிய இயலாது. சிவபரம்பொருளதுதிருவருளாகிய ஞானத் தைப் பொருந்திய ஒளியுடைய அப்பொருளால் முன்னைய உயிரறிவு நீங்கி, அப்பேரருள் ஞானத்திற்கு மேலான சிவபரம் பொருளில் ஒன் றிக் கலந்து அன்பு செய்து அதனகத்து அழுந்தி நிற்பது ஞான நிட்டை யாகும்.

கருவிகளின் வழிப் புறப்பொருளைப்பற்றி வரும் ஞானம் பாசஞானம் ஆகும். நான்கு வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், மந்திரங்கள் முதலியன சொல்லுலகு எனப்படும்; நிலம் முதல் நாதம் ஈருக உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் பொருள் உலகு எனப்படும். இவற் றின் வழிப்பெறும் ஞானத்தைப் பாசஞானம் என்பர்; படர்பாசமா ஞானத்தாலும் என இயைக்க. அவனருளால் அவன் தாள் வணங்கி மகிழ்தல் இறையருள் வழிவரும் ஞானமாகும். உயிர்விளக்கம் பெறு தற்கு அருள் காரணமாய் நிற்றலானும், அது ஒளிவடிவினதாய் நிற்ற லானும் 'தேசுறும் அதனுல்' என்ருர். பரத்து— மேலாய சிவபரம் பொருள்.

### ஒன்றியுணர்தற்குரிய வழி

85. விளம்பிய வகையில் நிட்டை மேவிடல் அரிதேல் முன்னம்
அளந்துஅறிவு அளித்த வற்றின் அளவுமற்று அவற்றி னுலே
உளம் கொளும் தனையும் உள்ள படியும்உற்று உணர்ந்து செவ்வே
தளர்ந்திடாது உவப்ப மற்றுஅத் தன்மைய தாகுந் தானே;

(தெ - ரை) மேற்கூறியவாறு ஒன்றி அழுந்துதற்கு அரிதாயின் கட்டுநிலையில் உலகியற் பொருள்களை அறிந்து உயிர்க்கு அறிவித்து நின்ற கருவிகளின் இயல்பையும், அவற்றின்வழி அறியும் உயிரது இயல்பையும், அவ்வுயிர்க்கு உயிராக ஒன்றி நின்று அறிவித்தும் அறிந்தும் வரும் சிவபரம்பொருளது நிலையையும் திருவருளைக் கூடி நின்று அறிந்து, சிவபரப்பொருளொடு ஒன்றி உணர்ந்த உணர்வை மறவாது நன்றியுணர்வுடன் நின்று அன்பு செய முற்கூறப்பட்ட நிட்டையது நிலைகூடும்.

உளம் - உயிர். உள்ளபடியும் –உயிரோடு பரம்பொருள் ஒன்றி யிருந்து உணர்த்தி வரும் நிலை. செவ்வே - உறுதியாக. 'தான் செவ்வே நின்றிட' என்னும் திருவாக்கும் காண்க. தளர்ந்திடாது – மறவாது: அயரா அன்பினைச் செலுத்துக என்பது கருத்து.

பாவனையால் பரம்பொருளை அடைய இயலாமை

86. பாவிக்கின் மனதி வேண்டும் பயன்இலை கரணம் நீத்துப்
பாவிப்பன் என்னில் என்ன பழுதுஉள பாவ கத்தால்
பாவிக்க ஒண்ணான் என்று பாவிப்பன் என்னின் நீஎன்
பாவிக்க வேண்டா ஆண்ட பரன்அருள் பற்றி னோர்க்கே.

(தெ - ரை) சிவபரம்பொருளைப் பாவனையால் பெறலாம் எனில் அதற்கு மனம் முதலிய கருவிகள் வேண்டும். கருவிகளால் அப்பரம் பொருள் அறியவொண்ணாது ஆதலின் அப்பாவனையால் பயனில்லை. அக்கருவிகளை நீக்கிப் பாவிப்பன் எனில் கருவிகள் நீங்கியவிடத்து எதனையும் அறியுமாறு இல்லை. ஆதலின் அவ்வகையான் பாவிக்க இயலும் என்பது எங்ஙனம்? அன்றியும் உயிர் கருவிகளொடு கூடாத விடத்து ஆணவத்தால் கட்டுண்டு அறியாமையிலேயே நிற்கும். பாவனையால் பாவிக்க எய்தாதவன் என்று பாவிட்டன் எனில், நீ அவ்வாறு செய்யும் பாவனை போலியாவதன்றி வேறு என் செய்யும்? இவ்வாற்றான் அனைத்துயிர்களையும் அடிமையாகக் கொண்டு நிற்கும் சிவபரம்பொருளின் அருளைப் பெற்றவர்க்குப் பாவனை வேண்டுவ தில்லை. அவ்வருளே அப்பரம்பொருளைப் பெறுவிக்கும் என்பதாம்.

மனத்தகத்து எண்ணிப் பாவித்தால் சிவபரம் பொருளை அறிய லாம் என்பர் யோக மதத்தார். மாற்றம் மனங்கழிய நின்ற மறை யவன் ஆதலின் கருவிகளால் அவனை அறியவொண்ணாதாம். அன்றியும் கருவிகள்வழி அறிந்தவெல்லாம் நிலையில் பொருள்களாம். இறைவனே என்றும் மெய்ப் பொருளாவன். ஆதலின் இறைவனை

இவ்வகையில் அறிய இயலாதாம். மனம் முதலிய கருவிகளின்றிப் பாவிக்கலாம் என்னில் அந்நிலையில் (கேவலநிலை) அறியாமை பொருந்துமாறன்றி அறிவு பொருந்துமாறு இல்லையாம். இப்படியன் இவ்வண்ணத்தன் என அறிய இயலாது என்ற நிலையில் பாவிக் கலாம் என்னில், அது போலிப் பாவனையாகவே முடியும். ஆதலின் திருவருள் வழி நின்று உணர அவனே முன்னின்று அருளுவன் என்பது கருத்தாம். பழுது - குற்றம் : ஆணவத்தால் கட்டுண்டு அறியாமை யில் நிற்கும் குற்றம்.

உயிர் சிவபரம் பொருளொடு கூடி நிற்குமாறு

87. ஒன்றுஇரண் டாகி ஒன்றின் ஒருமையாம் இருமை யாகி
ஒன்றின்ஒன்று அழியும் ஒன்றாது என்னின்ஒன் றாகாதீயின்
ஒன்றுஇருப்பு உறழின் அன்றும் உயிரின்ஐந் தொழிலும் வேண்டும்
ஒன்றிநின்று உணரும் உண்மைக்கு உவமைஆணவத் தொடுஒன்றே.

(தெ-ரை) பிரமப் பொருளாகிய ஒன்றே முதல்வனும் உயிர் களும் என இரண்டாக எண்ணப்பட்டு வீட்டுநிலையில் ஒன்றாய் விடும் என்னில், உயிர்களும் இறைவனுக்குரிய குணம் செயல்களைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறின்மையின் அது பொருந்தாது: உயிரும் சிவமும் வேறு வேறாய் இருந்தே வீட்டுநிலையில் ஒன்றாகு மென்னில், வேறுவேறாய் இருக்கும் பொருள்கள் ஒன்றாவதில்லை. அவ்வாறு ஆம் எனிலும் அவற்றுள் ஒன்று அழிந்து விடுதல் வேண்டும். அவ்வாறு இன்மையின் அதுவும் பொருந்தாது. உயிரும் சிவமும் வீட்டு நிலையிலும் ஒன்றாது என்னின், உயிரும் இறையும் பிரிவின்றி இயைந்து நிற்கும் என்னும் அத்துவிதநிலைக்கு மாறாகும்: ஆதலின் அதுவும் பொருந்தாது. தீயொடு கலந்த இரும்பு தீயின் தன்மையதாதல் போலச் சிவத்தொடு கலந்த உயிரும் அச்சிவத்தின் குணங்களைப் பொருந்தியிருக்கும் என்னில், சிவபரம்பொருள் செய்யும் ஐந்தொழில் களையும் உயிர்களும் இயற்றும் என்பதாதல் வேண்டும். ஆதலின் அதுவும் பொருந்தாது. ஆதலின் உயிர் சிவத்தொடு கூடிப் பேரின் பத்தைத் துய்த்து நிற்கும் வீட்டு நிலைக்கு உவமை கூறின், கட்டு நிலையில் உயிர் ஆணவத்தோடு கூடி அதுவாகவே இருந்த தன்மையது என்பதாம்.

ஒன்று இரண்டாகி ஒன்றும் என்பார் ஏகான்மவாதிகள். இருமை யாகி ஒன்றினொன்று அழியும் என்பார் ஐக்கியவாதிகள், வீட்டு நிலையில் ஒன்றாது என்பார் பேதவாதிகள். தீயில் பொருந்திய இரும்பு

போல் உயிர் சிவத்தின் குணங்களைப் பெற்று நிற்கும் என்பார் சிவ சங்கிராந்திவாதிகள். இந்நால்வகையரையும் மறுத்து அத்துவிதத்தின் உண்மையை உணர்த்துவதே இப்பாடலாகும். சட்டுநிலையில் உயிர் ஆணவத்தொடு பிரிவின்றி இயைந்து நின்றாற்போல வீட்டுநிலையில் சிவத்தோடு பிரிவின்றி இயைந்து நிற்கும். 'ஆணவத்தோடு அத்து வித மானபடி மெய்ஞானத் தாணுவினோடு அத்துவிதம் ஆகும் நாள் எந்நாளோ' எனவரும் தாயுமானார் கூற்று ஈண்டு நினைதற் குரியதாம்.

### வீட்டுநிலையில் ஆணவமலத்தின் நிலை

88 அழிந்திடும் பாசம் என்னின் நித்தம்என்று உரைத்தல் வேண்டா
அழிந்திடாது என்னின் ஞானம் அடைவது கருத வேண்டா
அழிந்திடும் சத்தி நித்தம் அழிந்திடாது ஒளியின் முன்னர்
அழிந்திடும் இருளும் நாசம் அடைந்திடா மிடைந்திடாவே.

(தெ-ரை) வீடுபேற்று நிலையில் ஆணவமலம் அழிந்துவிடும் என் னில் அதுஎன்றும் நிலையுடையது என மெய்நூல்கள் நுவலக் காரணம் இல்லை அந்நிலையிலும் அம்மலம் அழியாது என்னில் திருவருள் வழிப் பெறும் பேரின்பத் துய்ப்பை உயிர் பெறும் என நினைக்க வேண்டுவ தில்லை. அவ்வாறாயின் அதனை முடிக்குமாறு என்னை? எனில், வீட்டு நிலையில் அதுகாறும் உயிரது அறிவை மறைத்து நின்ற மலத்தின் வலி அழிவதன்றி அது அழியாது என்பதே கருத்தாம். அது எதுபோல் வதெனின் கதிரவன் ஒளியின் முன் நில்லாத இருள், அழிவதும் முனைத்து நிற்பதுமன்றி அடங்கி நிற்பது போலாம்.

செம்பின் களிம்பு குளிகையினால் அழிந்து பொன்னாவது போல, உயிரைத் தகைத்து நின்ற ஆணவமும் அருளால் அழிந்துவிட உயிர் சிவமேயாய் விடும் என்பர் பேதவாதிகள்' அவ்வாறாயின் 'பதியினைப் போல் பசு பாசம் அநாதி' என்றல் தொடக்கத்தனவாய கொள்கைக்கு மாறாகும். வீட்டு நிலையிலும் உயிரினின்றும் ஆணவம் நீங்குவதில்லை என்பர் பாடாணவாதசைவர். அவ்வாறாயின் உயிர் பேரின்பப் பெரு வாழ்வில் திளைத்து நிற்கும் என்றற்கு முரணாகும் இவ்விரு சாராரையும் இப்பாடல் மறுத்து நிற்கின்றது.

### வினைநீக்கம்

89 எல்லை இல் பிறவி நல்கும் இருவினை எரிசேர் வித்தின்
ஒல்லையில் அகலும் ஏன்றஉடல் பழ வினைகள் ஊட்டும்
தொல்லையில் வருதல் போலத் தோன்றுஇரு வினையது உண்டேல்
அல்ஒளி புரையும் ஞானத் தழல்உற அழிந்து போமே,

(தெ - ரை) எண்ணரிய பிறவிகளைத் தருதற்குக் காரணமாய பழவினை (சஞ்சிதம்) நெருப்பில் இட்ட வித்தெனக் குருமூர்த்தியின் திருநோக்கால் நீங்கும். எடுத்த உடல்வழித் துய்த்தற்குரிய நுகர்வினை, உடலளவில் நின்று நீங்கும். முற்பிறவிகளில் நுகர்வினையைத் துய்க்கும்பொழுது வருவினை ஏறினாற்போல இதுபொழுதும் தோன்றுமாயின் இருளை நீக்கும் கதிரவன் ஒளி போன்ற ஞானத் தீயால் அது அழிந்து போகும்.

உயிர் செய்யும் வினைகளுள் பழவினை குருமூர்த்தியின் திருநோக்காலும். ஏன்றவினை உடல் ஊழானும், வருவினை குருவருளால் பெற்ற ஞானத்தாலும் கெடும். ''ஏன்றவினை உடலோடு ஏகும் இடையேறும் வினைதோன்றில் அருளே சுடும்'' என்னும் திருவருட் பயனும். முன்னையபாடலால் ஆணவ மல நீக்கமும், இப்பாடலால் கன்மமல நீக்கமும் கூறப்பட்டன. இவ்விருமலமும் இவ்வாறு ஒழியவே எஞ்சிய மாயாமலமும் எடுத்த உடலொடு அழியும் என்பது விளங்கும். அல் - இருள். ஒளி - கதிரவனின் ஒளி.

### மலவாதனை மாற்ற வழி

90. பந்தமா னவைய றுத்துப் பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியா தொழியாது இங்குத் தன்மைபோல் வினையும் சாரும்
அந்தம் ஆதிகள் இல் லாத அஞ்செழுத்து அருளி னாலே
வந்தவாறு உரைசெய் வாரை வாதியா பேதி யாவே.

(தெ-ரை) அருட்குரவரின் தீக்கையால் மும்மலக் கட்டுக்களும் வலியழியப் பெற்று ஏன்ற உடலுடன் இவ்வுலகில் நிலவும்பொழுது, பழக்க வயத்தால் முன் தளைத்திருந்த மல விளைவுகள் தாக்காது ஒழியாது; பெருங்காயம் வைத்து எடுக்கப்பட்ட கலத்தில் அதன் மணம் மெல்லிதாய் வீசுமாறுபோல, நுகர்வினையும் ஏன்ற உடல்வழி வந்து தாக்கும். முதலும் முடிவும் இல்லாத திருவைந்தெழுத்தைக் குருவருளால் உணர்ந்தவாறு எண்ண அம்மலவழி வரும் துன்பங்கள் தாக்க மாட்டா; அருள் நெறியினின்றும் வேறுபடுத்தவும் மாட்டா.

உயிரிடத்துப் பிரிவின்றி இயைந்து நிற்கும் ஆணவ மலத்தை நீக்கிக் கொள்ளவே இறைவன் உடல், கருவி, நுகர்வுகளை உதவுகின்றான். அவ்வாறு உதவியவற்றின் வழி மேலும் வினைகள் ஈட்டப்பட அவை வளர்ந்து கொண்டு வருகின்றன. இவ் வளர்ச்சியே மேன்மேல் வரும் பிறப்பு இறப்புக்களுக்கு வித்தாகின்றன.

# திருவிளையாடல் புராணம்

உரைநடை

பாண்டியன் இடைக்காடன பாடலுக்குச் சிறப்பளித்தல்

சோமசுந்தரக் கடவுளின் பின் திருக்கோயிலுக்கு நடந்து சென்று விடைகொண்டு திரும்பிய பாண்டியன் இடைக்காடனைச் சங்கப் புலவர்களோடும் அழைத்துக்கொண்டுபோய்த் தனது செல்வ மாளிகையினுள்ளே புகுந்தனன். உடனே விதிப்படி வாழைகமுகுகளை நிறுத்தி, வெள்ளிய மேல் விதானம், மாலை, சாமரை, தீபம், பூரண கும்பம் கொடி முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்ட மாளிகையின்கண் இடைக்காடனை அலங்காரஞ்செய்து புலவர்கள் சூழப் பொன்னு சனத்தின் மீது இருத்தித் தானும் சிங்காதனத்தின்மேல் இருந்து, வெண்பூமாலையும், வெண்பட்டும், முத்துமாலையும் அணிந்து கொண்டு மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும், அந்தணர் ஆசி கூறவும், பெண்கள் பல்லாண்டு சொல்லவும் இடைக்காடன் இயற்றிய செய்யுளைக் கேட்டான்; இடைக்காடனுக்கும் சங்கப்புலவர்களுக்கும் முத்தாரங்களையும், பட்டாடைகளையும், ஏவல் மகளிரையும் யானைகளையும், குதிரைகளையும், விளை நிலங்களையும் நிரம்பக் கொடுத்து, அவர்கள் பின் காலினுல் ஏழடி நடந்துபோய் ''புண்ணியப் புலவீர்காள்! அடியேன் இப்பொழுது இடைக் காடனுக்குச் செய்த குற்றமெல்லாம் பொறுத்தருளக் கடவீர்கள்'' என்று பிரார்த்தித்து வணங்கினுன். அதற்குப் புலவர்கள், ''அரசே! நீ சொல்லிய சொல்லாகிய அமிர்தத்தினுலே எங்கள் கோபத்தீ தணிந்தது; சோமசுந்தரக் கடவுளது திருவருளினுலே இன்னமும் உனக்கு அளவில்லாத புகழும் பெருஞ்செல்வமும் உண்டாகக் கடவன'' என்று ஆக்கமொழி கூறிக்கொண்டு போயினுர்கள்.

குலேசன் அரிமர்த்தனனுக்கு முடி சூட்டிச் சிவனடி சேர்தல்

குலேச பாண்டியன் செய்த தவமானது உருமாறி வந்தாற் போலச் சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் சிங்கக்குட்டி போன்ற அரிமர்த்தனன் என்னும் பாண்டியன் மகனுக வந்து தோன்றினுன். பின்பு குலேச பாண்டியன் பல காலம் கழித்துச் சிவபெருமான் திருமுடியில் வில்லால் அடித்த அருச்சுனன் போல வரம்பெறும் தன் புதல் வனுகிய அரிமர்த்தன பாண்டியனிடத்தில் நிலவுலக ஆட்சியை அளித்துவிட்டு இறைவன் திருவடி நிழலை அடைந்தான்.

செய்யுள்—38

ஆகச் செய்யுள்—2648

## 57. வலை வீசின படலம்

மீனாட்சியம்மையார் சாபம் பெறுதல்

எல்லையில்லாத பேரழகனும், கூடல் என்னும் திருவாலவாயில் எழுந்தருளிய நீலகண்டனுமாகிய சோமசுந்தரக்கடவுள், உலகை யீன்ற கன்னியாகிய மீனாட்சியம்மையாருக்குத் தனியிடத்தில் இருந்து கொண்டு அதிரகசியமாகிய வேதத்தின் உட்பொருளை உபதேசித்தருள் வாராயினர். இறைவன் இனிய திருவருளுடன் கூறும் நால்வேதப் பொருள்களையெல்லாம் எம்பெருமாட்டியார் யாது காரணத் தாலோ அச்சமடைந்தவர் போலக் கவலையும் சிறிது தோன்ற விருப்பமின்றிக் கேட்டார்.[1] சோமசுந்தரக் கடவுள் அதனை அறிந்து பிராட்டியை நோக்கி, ''பெண்ணே! இருள் போன்ற உள்ளத்தினை யுடைய ஏனை மகளிர் போன்று நீ நம்மிடத்தே பராமுகமுடையை யாகி வேதப் பொருளை விருப்பமின்றிக் கேட்டாய்! இக் குற்றத்தி னாலே நோன்பும் அறனும் இல்லாமல் மீன் பிடித்து வாழும் இழிஞ ராகிய பரதவர் (வலைஞர்) குலத்து மகளாகக் கடவை'' என்று பணித்தருளினர். உடனே தேவியார் அஞ்சி ''வள்ளலே! யான் தங்களைப் பிரிந்து வாழ வல்லனோ?'' என்று கூறி வணங்கினர்.

சிவபெருமான் உமையின் துன்பத்தைக் கண்டு திருவுளம் இரங்கி ''கடற்கரைச் சோலையில் வாழும் பரதவ மன்னனுக்கு மகளாய் அங்கே நீ வளர்கின்ற நாளிலே நம் வந்து உன்னைத் திருமணஞ் செய்து கொள்வோம்'' என்று திருவாய் மலர்ந்து அம்மையைச் செலவிடுத்து இருந்தருளினர்.

சிவகுமாரர் இருவர் கோபத்தின் விளைவு

பின்பு, விநாயகக் கடவுள் அதனையறிந்து தம் தந்தையாராகிய இறைவன் திருமுன் வந்து, ''இந் நிகழ்ச்சி அனைத்தும் இதனால் அன்றோ விளைந்தது?'' என்று அங்கிருந்த புத்தகச் சுவடிகளையெல்லாம் தம் துதிக்கையினாலே கவளத்தை அள்ளுதல் போல அள்ளிக் கடலின் கண் எறிந்தார். முருகக் கடவுளும் தந்தையார் திருக்கரத்தில் இருந்த சிவஞானபோத நூலை விரைந்து பிடுங்கிக் கடலிலே எறிந்தார்

---

1. இறைவன் பரதவர் தலைவனுக்கு அருள்புரியுங் குறிப்பினன் என்பதை உணர்ந்து இறைவி அதற்கேற்ப இங்ஙனம் அசட்டையாகக் கேட்டார் எனக் கொள்ளுதல் வேண்டும்.

### இறைவனின் சீற்றம்

அப்போது நான்மாடக் கூடலின் இறைவர் திருநந்தி தேவரை வெகுண்டு நோக்கி, "நாம் இருக்கும் சமயம் அறியாது இவர்களை உள்ளே விடுத்து நீ வாளா இருந்தனை; அதனால் தீங்கு விளைந்தது; உனக்கும் நேர்ந்த இத்தீங்கு ஒழிய இப்பொழுதே நீ சுறுமீன் வடிவு கொண்டு கடலிற் புகுந்து உழலக் கடவாய்'' எனச் சபித்தருளினர்; விநாயகக் கடவுளுக்கு விதிக்கும் சாபம் தம்மையே சாரும் ஆதலால், அவருக்குச் சாபம் விதித்திலர்; முருகக் கடவுளை நோக்கி, ''நீ வணிகர் குலத்தில் [1]ஊமைப் பிள்ளையாகக் கடவாய்'' என்று பணித்தருளினர்.

### நிகழ்ச்சித் தொகுப்பு

இவ்வாறு இறைவன் ஆணையினலே இறைவி வலைஞமாது ஆனதும், திருநந்திதேவர் சுறு மீனுகிக் கடலிற் புக்கதும், அருள் வள்ளலாராகிய இறைவன் அம் மீனைப் பிடித்து அம்மாதினை மணந்து சென்றதும், அம்மையார்க்குத் திருவுத்தரகோசமங்கையில் உபதேசஞ் செய்தருளியதுமாகிய இவற்றை முறையாகக் கூறுவோம்.

### வலைஞர் சேரியின் வருணனை

வையையாற்றின் அழகிய துறைகள் பொருந்திய பாண்டி நாட்டிலே கீழைக் கடலின் ஓரத்திலே [2]பாக்கம் என்னும் ஊர் (நெய்தனிலத்தூர்) ஒன்று உள்ளது. அஃது ஆழமுடைய உப்பங் கழியாகிய அகழியினலும், மிக உயர்ந்து வளர்ந்த தாழையாகிய பெரிய மதிலாலும் சூழப்பெற்றது. இதன் அழகை என்னென்று கூறுவது? வளைந்த முட்களையுடைய இலைகளால் மறைபட்டுத் தம் முன் எதிரெதிரே நெருங்கிக் காற்றுத் தள்ளுவதால் மலரோடு நின்று அசையும் தாழைகள், வளைந்த உடலுடன் கையிலுள்ள

---

1. இந்த ஊமைப்பிள்ளை மதுரையில் (மதுரையை அடுத்த உப்பூர் என்னும் ஊரில்) உப்பூரி குடிகிழார் (தனபதி) மகன் உருத்திர சருமனுகத் தோன்றியதை இறையனர் அகப்பொருள் முதற் சூத்திர உரை கூறும்.

2. இப் பாக்கம் 'உப்பூர்' எனப் பெயர் பெறும். இஃது உருத்திர சருமனுடைய ஊர். இவ்வூர் பரமக்குடிக்கு வடகிழக்கில் உள்ளது.

கேடகமாகிய வட்டத்துள் மறைந்துநின்று வாளை விதிர்த்துப் போர்புரியும் வீரர்களை ஒத்தன. புலால் நாறும் மீன்களை உலர்த்தும் ஒலியும், அவற்றை உண்ண வரும் பறவைகளை ஓட்டும் ஒலியும் அவற்றை விலை கூறும் ஒலியும், மீன்களை வாங்குவோர் ஒலியும் பரதவர் வலை வீசும் ஒலியும், அவ்வலையை இழுக்கும் ஒலியும் ஒன்று சேர்ந்து கடலின் ஒலியை அடக்கி எழும். நுளைச்சிறுமியகள், வைத்து விளையாடும் பாவைக்கு மலர்ந்த தாழைகள் அருகிருந்து மகரந்த மாகிய சோற்றை ஊட்டும்; கடலின் அலைகள், முத்து மாலைகளைப் பூட்டும்; புலிநகக் கொன்றை மரங்கள் மணமிக்க தம் மலர்களைச் சூட்டும்.

மேலும் நீர் நிறைந்த கடலின்கண் நீராடி நெடுந்தூரம் வழிச் செல்லும் யாத்திரைக்காரர்களுக்குத் தாழைகள் அறநூல் உணர்ந் தனபோலப் பொதிந்த சோற்றினை (மூடிய மகரந்தத்தை) அளிக்கும். மலந்த புன்னை மரங்கள் முத்தையும் (அரும்பையும்), பொன்னையும் (மலரையும்), பவளத்தையும் (பழத்தையும்) திரட்டி அயலோர் அறியுமாறு கொடுக்கும்.

மீன்களை விற்கும் வலைஞர்களின் சிறு குடில்கள்தோறும் கடலில் உண்டாகிய பவளக் கொடிகள் போய்த் தாவி மேலே படர்ந்து நிற்கும்; வலைச்சியர் தம் முன்றிலில் உலர்த்தும் மீன்களைக் கடலின் அலைகளால் வீசப்படும் பெருமுத்துக்கள் சிதைத்துத் தள்ளும். நுளைப் பெண்கள் ஆம்பல் மலர் போன்ற வாயினைத் திறந்து கூவி விற்கும் கயல் மீன்களுக்குப் போட்டியாக அவர்களுடைய இரு கண்கள் அக்கயல் மீன்களின் தோற்றத்தை அளிக்கும்; அவர்களின் கூந்தலிலுள்ள தாழை மலர், மீன்களின் நாற்றத்தைப் போக்கும். உப்பங்கழிகளிலே மலர்ந்த ஆம்பல் மலரிலே அல்லாமல் கள்ளுண்ட நுளைச்சியரின் வாயாகிய ஆம்பல் மலரிலும் வண்டுகள் மொய்க்கும்.

### பரதவ அரசனின் தன்மை

இத்தகைய நுளைச் சேரியிலே [1]ஒருவன், முற்பிறப்பிற் செய்த பெருந் தவத்தினல் தேவர்களினும் தூய்மையுடையவனுய் இருந்தும், சிறிது தீவினையைச் செய்ததனுல் பரதவர் குலத்தில் வந்து பிறந்தான்; அவன், பரதவர்கள் அனைவர்க்கும் அரசன்; கரிய நிறத்தினரான

---

1. இவன் பெயர் 'அதியரையன்' என நம்பி திருவிளையாடல் கூறுகிறது. அதி-வலைச்சாதி; அதிபத்தர் என்பது போல.

வலைஞர்கள் படகுகளைச் செலுத்திக் கடலில் பிடிக்கும் மீன்களைத் திறையாகக்கொண்டு நிறைக்கப்படும் வாயிலையுடையவன்; சிவபெருமான் திருவடியிலே பதிந்த பேரன்புடையவன்.

உமாதேவியார் வலைஞர் மகவாகத் தோன்றுதல்

அப் பரதவ மன்னன் பன்னாட்கள் வரை மகப்பேறின்றி இம்மைக்கும் மறுமைக்கும் ஒரு பற்றுக்கோடில்லாதவன் போல மிக்க வருத்தங்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் தன் கிளைஞருடன் கடல் மீனைப் பிடிக்கும் பொருட்டுக் கடலுக்குச் செல்லும்பொழுது அக் கடற்கரையின் ஒரு பக்கத்திலே ஒரு புன்னைமர நிழலிலே, இமய மலையரசன் செய்த தவத்தினால் பதுமை என்னும் மலரோடையிலும், பாண்டியன் செய்த தவத்தினால் வேள்வியிலும் மகவாக வந்து வெளிப்பட்ட அம்மையார், இறைவன் ஆணையினால் பரதவராசன் முற்பிறப்பிற் செய்த தவப்பயன் செலுத்த, தமது இச்சையின் வழியே ஒரு குழந்தையாகி, அப்பரதவ மன்னன் அன்பினுக்குத் திருவுள்ளம் இரங்குவார் போலச் சிவந்த திருவாயினைத் திறந்து அழுதுகொண்டு கிடந்தார். வலைஞர்கோன் குழந்தையைக் கண்டான். அப்போது மகிழ்ச்சி மிக, ''கரிய கடலின்கண் தோன்றிய திருமகளோ? நீரிலே மறைந்துறையும் நீரர மகளோ? கானகத்தில் உறையும் கானர மகளோ? இவர்களுள் யாரோ ஒரு பெண், குழந்தையாகிக் கண்கள் இமைக்க இங்கு இருந்தவள்; மகப்பேறில்லாத எளியேனுக்குச் சோமசுந்தரக் கடவுள் அருள் சுரந்து தந்தருளிய குழந்தை இது'' என்று கருதி, வலத்தோள் துடிக்க அன்பு கூர்ந்து எடுத்துக் தழுவிக் கற்பினிற் சிறந்த தன் மனையாள் கையிற் கொடுத்தான். அவள், பிறவிக் குருடன் பொருளை அறியுமாறு கண் பெற்றாற்போலவும், மிக்க வறியவன் பெருநிதி பெற்றாற் போலவும் அம் மகவை வாங்கினாள். வலைஞர்கள் கடலைப்போல ஆரவாரித்தனர்; வலைச்சியர் கை கொட்டிக் குரவைப் பாடல் பாடினர்.

வலைஞர் கோமானின் மனைவியும் தான் வருந்திப் பெறாது பெற்றெடுத்த அக் குழந்தையைத் தழுவி முத்தமிட்டு உச்சி மோந்து பேரானந்தத்தோடு, ''இக் குழந்தை அழகாகிய ஒரு மாணிக்க விளக்கு ஆகும்'' என்று கருதிப் போற்றி வளர்ப்பா ளாயினள்; மீன் விற்றுச் சேர்த்த பசிய பொன்னாற் செய்த பல அணிகளையும், காசுடன் முத்துக்களும் பாசி மணிகளும் இடையிட்டுக் கோத்த மாலைகளையும், சங்குமணி மாலைகளையும் தங் குலத்துக்கிசைய

குழந்தைக்கு அணிந்து, அளவற்ற பேரழகிற்கு ஓர் அழகுசெய்வதைப் போல அழகு செய்து பார்த்து மகிழ்ச்சி கொண்டாள்;

அம்மையார் சிறுமியர்களுடன் விளையாடுதல்

அம்மையார், பரதவச் சிறுமியர் கூட்டத்தோடும் கடற்கரைக்குச் சென்று மணலால் சிற்றில் கோலி விளையாடியும், முத்துக்களைச் சிறு முறத்தால் கொழித்தும், தாழைகளும் புலி நகக் கொன்றைகளும் சூழ்ந்த சோலையில் அழகிய மலர்களைக் கொய்தும், முகில் போன்ற கூந்தல் பின்னே தாழக் கடலில் நீராடியும் மகிழ்ந்தாள்.

பசிய கொடிபோன்ற இடையும், தன் உயிர்த் துணைவராகிய அண்ணலார் குறிப்பிட்ட நாளும் சிறிது சிறிதாகக் குறையவும், அவ்விறைவனிடத்தில்வைத்த அன்பு மேன்மேலும் பெருகவும், நாடோறும் உயிர்களனைத்தையும் வளர்க்கும் அம்மையார் உடல் வளர்ச்சி செவ்வனே பெற்று வந்தாள்.

நந்திதேவராகிய சுரு மீன்

திருவாலவாயுடைய இறைவன் பணித்தருளியபடியே இளம் பிறையணிந்த சடைமுடியும் நான்கு திருக்கரங்களும் பொருந்திய திருநந்தி தேவரும் சுருமீன் வடிவங்கொண்டு அலைகளையுடைய கடலிலே சேர்ந்து மூழ்கி இனிதாக இருந்தார். அப்போது நந்தி தேவராகிய அச் சுருமீன் விநாயக் கடவுளும் முருகக் கடவுளும் முன்னர்க் கடலின்கண் எறிந்த நூல்களனைத்தையும் தன் சிரசின் மீதும், சிவபெருமானுடைய திருவடியைத் தன் மனத்தினுள்ளும் அடக்கிக் கொண்டு பாற்கடலைக் கலக்கிய மந்திர மலையாகிய மத்தைப் போலக் கடலைக் கலக்கும்; தோணியையும், படகினையும், சோங்கினையும் (ஒரு வகை மரக்கலத்தினையும்) கிட்டி அவை பிளவு படுமாறு விரைந்துசென்று தட்டும்; சோங்குகள் சரக்கோடு கவிழும்படி அவற்றின் கீழ்ச்சென்று முட்டும். தன்மேலே சீறிவரும் சுருமீன்கள் அனைத்தையும் கொம்பில் கோத்துப் புறத்தில் வீசும்.

நந்தியாகிய அச் சுருமீன் கடல் நீரைக் கலக்குதலாலும், நூல்களைச் சிரத்தில் தாங்கி மனம் வருந்தும் புலவர்க்கு (வானவர்க்கு) அமுது அளித்தலாலும் மந்தர மலையை நிகர்த்தது. அது, மோதும் அலைகள் வழியே சென்று நுளைச் சேரியிலுள்ள குடிசைகளைத் தள்ளும்படி துள்ளும்; மேகங்களின் கருச்சிதையும்படி பாயும்; கடலிலே மரக் கலங்கள் போகாவண்ணம் அங்குமிங்கும் அலைந்து உலவும்.

பரதவர் சுறுமீனைப் பிடிக்க முயலுதல்

நெய்தனிலத் தலைவன் அச்சுறுமீன் புரியும் இடையூற்றினைக் கண்டு, ''இஃது எத்தன்மைத்து; நாம் அதனை எவ்வாற்ருல் பிடிப்பது'' என்று கருதித் தம் வலைஞர்களுடன் பெருவலை யேந்திப் படகினைச் செலுத்திச் சென்று, அதன்மேல் பெரிய வலைக் கயிற்றைப் பிடித்து வலை வீசினன். அம்மீன் அப்படகினைச் சுற்றிப் பாய்ந்து தன் வாயிற் கொம்பினுல் கிழித்தது. உடனே பரதவன் வேருெரு படகின்மேற் பாய்ந்து வலைவீச அம்மீன் அப்படகினையும் உடைக்க, மற்ருெரு சோங்கின்கண் ஏறி, நீண்ட வலையை வீசினுன். பரதவ மன்னன் வெவ்வேறு கலங்களில் புகுந்து வலைவீசிஉழலுதல், ஒருயிர் வினைவயத்தால் வெவ்வேறு உடலின்கட் புகுந்து உழலுதலை ஒக்கும்.

வலைஞர்கோமான் முன்னே வலையை வீசினுல் பின்னே எழுந்தும் பின்னே வீசினுல் முன்னே எழுந்தும், வலப்பக்கத்தில் வீசினுல் இடப்பக்கத்தில் எழுந்தும், இடப்பக்கத்தில் வீசினுல் வலப்பக்கத்தில் எழுந்தும் அம்மீன் திரியும். அஃது ஒருதரம் வலையிலே அகப்படும்; 'அகப்பட்டது' என்று மனமகிழ்ந்து வலையை இழுப்பவனுடைய உள்ளங் கலங்க அவ்வலையினின்றும் வழுவிப் பொருளாசை பிடித்த விலைமகளிர் போலவும், ஆன்ம போதத்தால் அறிபவர்க்கு அறிதற் கரிய சிவபரம் பொருள்[1] போலவும் ஓடிவிடும்.

எறிவலைப்படும் அகமலர்ந்(து) ஈர்ப்பவன் உள்ளம்
மறுதலைப்பட வலையினும் வழீஇப்பொருள் ஆசை
நெறிமலர்க்குழல் நல்லவர் நினைவென நினைவுற்(று)
அறிபவர்க்கரி தாம்பரம் பொருளென அகலும்.

பரதவர் கோமான் சுறு பிடிபடாததைக் கண்டு வருந்துதல்

பரதவராசன் தன் ஏவலாளருடன் அம்மீனைப் பிடித்தற்கு வேண்டும் தொழில்களெல்லாம் செய்யவும், அஃது அகப்படாமை யால், ''இனி யாவரே இதனைப் பிடிக்க வல்லவர்'' என்று கருதி மிக வருந்தினுன். ஏவலாளரும் பெருங்கவலை கொண்டனர். பிறகு பரதவர் தலைவன், ''இக் கடலின்கண் மந்தாரமலைபோலக் கிடந்து கலக்கும் சுறுமீனை இங்கு வந்து பிடிப்பவன் எவனே அவனே என்னுடைய மகளுக்கு மணமகனுதற்கு உரியவன்'' என்று உறுதி கொண்டிருந்தான்.

---

1. இங்கு, ''தன்னறிவதனுல் காணும் தன்மையன் அல்லன் ஈசன்'' என வரும் சிவஞான சித்தியார் அடி கருதற்பாலது.

### அம்மையாரை மணக்க ஐயன் வருதல்

சோமசுந்தரக் கடவுள், ''பரதவர்குலத்தில் தோன்றி வாழும் அம்மையாரைப் பிறர் வந்து மணம் முடிக்கும் பொருட்டுக் கேட்டு, அவர் வெறுத்து இல்லை என்று போதற்கு முன்னரே அவருக்கு மீன்பிடிக்கும் வலைஞன் உருவினை நாம் எடுத்துப்போவோம்'' என்று திருவுளங் கொண்டு மிகக் கரிய இருளை முகந்தாற்போன்ற வடிவுடன் கச்சினை இறுக்கி, உடை வாளை அணிந்து, தோளின்கண் மேலாடை தாங்கித் தேன் கொப்பளிக்கும் நெய்தல் மலர்மாலையைத் தலையிற் சூடிய ஒரு வலைமகன் திருக்கோலம் தாங்கியருளினார். உலக முழுதையும் ஈன்றருளிய அங்கயற்கண் அம்மையை அருளில்லாதவர் போல, வலைஞர் குலக் கன்னி ஆகுமாறு சபித்த காரணம் யாதோ? ஆதலால், சாபத்தால் பற்றப்படாத சோமசுந்தரக் கடவுளும் வலைஞர் திருவுருவம் தாங்கி வரவேண்டியதாயிற்று ஆலவாய் அண்ணலின் செய்கை நன்று! நன்று! இஃது அழகாயிருந்தது! சிவகணத் தலைவருள் ஒருவன் வலைஞர் வேடம் எடுத்து வீசும் வலையைத் தோளின்கண் இட்டு, முதுகின்புறத்தில் மீன்இடும் கூட்டினைத் தொடுத்துத் தாங்கித் தம்பின்னே நடந்துவர, நெய்தனிலத்தூரை அடைந்து, உப்பங்கழியிலுள்ள முள்ளிக்காட்டினையும், தாழைக்காட்டினையும், நெய்தல் மலரைச் சுழித்து அலைக்கும் கிடங்குகளையும் கடந்து, அழகிய சோலைகள் சூழ்ந்த வலைச்சேரியை ஆலவாய் அண்ணல் அடைத்தனர்.

### இறைவனும் பரதவர் தலைவனும்

அப்போது அவ்வூரிலுள்ள வலைஞர் கோமான் உள்ளத்தில் ஒரு வியப்புத் தோன்றுமாறு எழுந்தருளிவரும் காளைப் பருவமுடைய வலைமகனாரது வருகையைக் கண்டு, ''அழகினையுடைய நம்பி! நீ யார்? செப்புக'' என்று வினவினன். நான்மறைகளாலும் அறியவொண்ணாத இறைவராகிய வலைஞர், ''நான் மதுரையில் வலைஞர்களுக்கெல்லாம் தந்தைபோன்று விளங்கும் அரசனாய் உள்ளவனுடைய மைந்தன்; படைத்துக் காத்து அழிக்கவும் வல்லவனாவேன்; அன்றியும் பெரிய மீன்களைத்தும் அகப்படுமாறு வலைகொண்டு எறிவதிலும் வல்லவனாவேன்'' என்றார். அதுகேட்ட வலைஞர்கோமான், ''இவன் உண்மை வலைஞன் அன்றி வலைஞர்கோலம் பூண்டு நடிக்கும் மகனோ? இவன் முன் கூறிய சொல் ஒன்று; இப்பொழுது சொன்ன சொல் ஒன்று; இவ்விரண்டையும் சோதித்துக் காண்போம்'' என்று கருதி, ''ஐயனே! இந்தத் துறையிலே ஒரு வலிய சுறுமீன் மிக்க சீற்றங்கொண்டு திரிகின்றது; அதனை நீ குறிவைத்துப் பிடித்தாயாயின் எனது மகளை உனக்குத் திருமணம் செய்து தருவேன்'' என்று கூறினான்.